JL
[illegible]2 11, N30 BV
N30·1·11.
188776

# பால வித்யா

(மாதப் பத்திரிகை)

18877

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றுங் கல்லார் அறிவிலா தார் "
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு "

| தொகுதி I | 1930ஞ நவம்பர்மீ<br>பிரமோதூதஞ கார்த்திகைமீ | ...தி X... |
|---|---|---|

DEC 1930 ... 600 ...

ஸ்ரீ:

## கல்வியும் பயனும் (தொடர்ச்சி)

கடலூர்
தமிழாசிரியர் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரி எழுதியது.

### கல்வி முறை.

கற்றற் பாலனவாய விடயங்கள் பலபட எண்ணிலவாய்க் கிடத்தலின், கல்வி முறையும் பல்வேறு வகைப்படக் கிடத்தலிற் புதுமை ஏதும் இன்று. பண்டைக்காலத்தவர் ஒரு வகை முறையினைக் கையாண்டிருத்தல்கூடும். பிற்காலத்தவர் தத்தம் அறிவுக்கும், காலநிலை மாற்றத்துக்கும் ஏற்பப் பற்பல முறைகளை உபயோகித்தலும் நீதியே. தற்போதும் கல்வி பயிலும் முறை அடிக்கடி திரிந்தும் பெருகியும் வருதல் நிதரிசனமே. இன்னவற்றை ஓர்வுழி, கற்றல்முறை இன்னதேயென எவரானும் அறுதியிட்டுரைத்தல் இயலாது. கற்போர் அறிவுநிலைக்கும், தேசநிலைக்கும், காலநிலைக்குந்தக இம் முறை அடிக்கடி மாற்றம் பெற்றுக்கொண்டேயுள்ளதென விளங்குகிறது. என்றாலும் பொதுவான சிற்சில கோட்பாடுகளும் முறைகளும் யாண்டும்

ஒருபு[illegible]வுள. ஈசன் ஒருவனை யெனினும், யாங்ஙனம் [illegible]னை யுடைத[illegible]குறிய பாதைகள் பலபடக்கிடக்கின்றனவோ அங்ஙனமே அறியப்படும்பொருட்கள் ஒரு நீர்மைத்தெனினும், அறியுமாறுகள் பலவாயுள்ளன.

மிகப் பழைய காலத்து — எழுத்துமுறை ஏற்படற்கு முன்பு — மக்கள் சைகை, சொல்லளவுகளிலே கல்வி கொண்ட காலம் — எதுவும் நேர்முகமாகவே ஒருவர்க்கொருவர் கற்கலாயினர். அதுசாலே உலகியல் முதலிய பல சாகைகளாகவுள்ள கல்விதானும், தற்போதைப்போன்று விரிவுடையதாக இருந்திராதென்பது திண்ணம். சைகைமுறையில், சொல்வோன் இயம்பும் பண்டத்தைக் கண்ட பின்றான் சைகைப்பொருளின்னதென ஒருவன் உணரக்கூடும். விளங்கனியொன்றினை விழைபவன் அக் கனியையேனும், அதன் போலிகளையேனும் காட்டித் தன் குறிப்பை யுணர்த்த, எதிர் நின்றோன் அறிய[illegible]மாயிருந்தது. சொற்பயிற்சி பல்கியதும் இத் துன்பம் தேய்[illegible]றலாயிற்று. மேலும், பெயர்ச்சொற்களே பெரிதும் வழங்கப்பட்டு, வினைச்சொற்கள் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகிவந்திருக்கவேண்டும். சொற்பழக்கம் வளருங்காலத்தும் முற்கூறிய நேர்முகப் படிப்புவழக்காற்றில் மிகுதியும் இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. மக்கள் தாம் தாம் வாழும் இடத்துள்ள பொருட் பெயர்கள், தொழில் பெயர்கள் முதலியவற்றை அறிந்தனரே யன்றிப் பிறவிடத்துச் சொற்களையும், வழக்கங்களையும் சாதனங்களில்லாக் குறையால் கற்க இயன்றிராது. என்றாலும், மக்கள் மென்மேலும் கல்வியைச் செம்மையும், திட்டமும், சுலபமும் பெறுவிக்கு முறைகளிற் சாலவுழைத்தனரென்றேற்படுகின்றது.

முற்கூறிய வுழைப்பின் பயனாக எழுத்துப் பயிற்சி ஏற்பட்டு வளம்பெற்றகாலை, இக் கல்வியைக் கற்பித்தற்கெனவும் ஒழுக்கமுதலியவற்றை உணர்த்துவதற்கெனவும் மக்கட் செறிவு வாய்ப்புற்ற இடந்தோறும் சிறு சிறு கழகங்கள் காணப்பட்டிருக்கலாம். இக் கழகங்களில் கல்விகைவரப்பெற்ற நல்லொழுக்கினர் கணக்காயராக விருந்து கல்வியில் நாட்டமுடையவர்கட்குப் போதிக்கலாயினர். இக் குருமார்களின் தொகை கொஞ்சமாகவும் கல்விவேட்கையுடை மாந்தர்தொகை மிகையாகவும் இருக்கவே நெடுந்தொலைவிலிருந்தோரும் தத்தம் மக்களைக் கல்வியினிமித்தம் நெடுநாட் பிரிந்திருக்கத் துணிவெய்தினர். தம் மக்களைக் கல்விநிரம்புந்தனையும் ஆசிரியரகத்தே விட்டுவைக்கவும் தொடங்கினர். இவ்விதம் ஆசிரியரைச் சார்ந்து அவர் மனையகத்தே வதிந்து மாணாக்கர் கல்வி கற்றலையே குருகுலவாசம் என்றழைத்தனர். இக் குருகுலங்களும் தத்தம் தலைவரான தேசிகரின் கல்வியாற்றற்கியையச் சோபான முறைப்பட்டு மிருந்திருத்தல் கூடும். முன்னாட்



களிலிருந்த அனைவருமே இம்முறையிற் கல்வி கற்றனர் என்றுரைத்தலும் ஒண்ணாது. கல்வியகத்து விருப்பும், கற்றற்குரிய வசதிகள் பிறவும் வாய்ப்புடையவர்கடாம் இங்ஙனம் தலைப்பட்டு ஒழுகியிருக்க வேண்டும். புத்தக முதலிய சாதனங்களில்லாத காலமாதலாலும், நூல்களைச் சுவடியில் எழுதியேனும், வல்லார்களால் எழுதப்பட்ட ஏடுகளைப் பெருந்தனந் தந்து பெற்றேனும் வாசிக்கவேண்டியிருந்தமையால் இவ்வித சவுகரியங்களுடைத்தாயினோரே கற்றல் மேவினர். தனவந்தரல்லாதார் வாயினால் நெட்டுருச்செய்தே கல்வி கற்கலாயினர். எழுத்துமுறை ஏற்படற்கு முந்தியே இவ்விதமாக உருச்செய்யும் முறை அனுசரிப்படைந்தது. வேதத்திற்கு 'எழுதாக்கிளவி' என்ற பெயரிருத்தலும் இதனை உறுதிசெய்யும். குருமார்களிடம் கற்றுச்சொல்லிகள் பெரிதும் நெட்டுருச்செய்தே எவ்வித நூல்களையும் கற்றனர். வாய்ப்பாடத்திற்கு அனுகுணமாகவே அனைத்து நூல்களும் சூத்திரமும் செய்யுட்களாகவுமே யாக்கப்பட்டுள்ளன. வசனநடைப்பழக்கம் தோன்றப்பெறாமலே யிருந்தது. 'சுருங்கக்கூறி விளங்கவைத்தல்' என்னும் வழி மிகவும் திருத்தமடையலானது. இயற்கை முறையானும், நூன் முகத்தானும் சீடர்கள் சுருங்கிய காலத்திலே மிகுந்த கல்வியைப் பெற்று வித்வான்களாகத் திகழ்ந்தனர். செய்யுளாறு தினை தினை பெருகி அலங்காரமாகப் பிரவகிக்கலாயிற்று. எனவே நம் நாட்டின் பண்டைக்கால கல்விமுறை பெரும்பாலும் நெட்டுருச்செய்யுமுறை யொன்றேயாகும். இதற்கு ஞாபக சக்தி அதிகம் வேண்டும். ஷெ முறையால் செய்யுட்களும் ஞாபகசக்தியும் வளரலாயின. இங்ஙனம் குருகுலவாசப்படிப்பின் உதவியால் பல புலவர்கள் தோன்றலாயினர். அப்புலவர் அறிவும், ஆற்றலும், ஒழுக்கமும் பல புரவலர்கள் மனத்தைத் தம்வழி இழுத்தலாயின. அரசர் பலரை, அறிவுடையவர் தம் வழி நிறீஇத் தேய மக்கள் கல்வி நலத்தைக் கொள்ளு முறையிலும், நூல்களைப் பெருகச்செய்யும் வழியிலும், தத்தமக்கியன்ற ஆதரவளிக்கச்செய்தனர். அரசாங்கச்சார்பில் பல அறிஞர் குழாங்களும், இளைஞர் கல்விக் கழகங்களும் உதிக்கலாயின. இச் சங்கங்களால் நூல்களும், நூற்றிருத்தமும் செய்யப்பட்டன. கழகங்களால் மக்கள் கல்வியறிவு வளரலானது. கல்வியைப்பற்றிக் கவனிப்பதனை யொரு கடமையாகக் கொள்ளும்படி அரசர்களை வற்புறுத்தலாயினர். அரசர்களும், தம் பல்வேறு கடமைகளுள் கல்வி பேணலையும் ஒன்றாகக் கொண்டனர். திருக்குறள் முதலிய நூலகத்தே அரசர்க்குரிய கடமைகளுள் கல்வியும் சேர்க்கப்பட்டுள்ளமை இதனை நினைவேற்றும். மற்றும் தொன்னூல் பலவற்றுள் அரசர்கட்குப் புலவர் நல்லறிவூட்டுவனவாயுள்ள செய்யுட்களில் இக் கல்வித் துறையும் காணப்படுவதால் அறியலாம். மற்றும் பண்டைக்காலங்களில் உத்தியோக முதலிய லௌகிகச்சார்பான கல்வி பெரிதும் விரிந்து தற்போதைப்போலி

ருந்திராது. ஆன்மார்த்தமான கல்வியே யிருந்திருந்தது. வேதாகமங்களாகிய முதுநூற்கள் யாவும், மக்கள் வயிறு வளர்க்கப் பெரிதும் இடர்ப்பாடுற்று உழைக்கவேண்டியில்லாத காலத்தெழுந்தன வென்பதில் சிறிதும் ஐயமில்லை. உத்தியோகவேட்கைமீதூரலுற்ற காலத்தே உலகானுசரணையாக கல்வி, கொழுந்துவிட்டு வளரத்தொடங்கித் தன் பயன்களைக் காட்டியும், ஊட்டியும் மக்களைத் தன் வழிக்கீர்த்தலாயிற்று. தற்போதுள்ள பற்பல கழகங்களில் பயில்வோரும் இப்பலன்களைக் கருதியே பெரிதும் பயில்கின்றனர். இவ் விளைவிற்குக் காரணபூதமாவான் 'பசிப்பிணி யென்னும் பாவி' யே யாவான். எனவே, கல்வி நல்லாறு தன் இருகிளை நதிகளுள் ஒன்றிற் பெருக்கில்லாமலே ஓடிக்கொண்டிருக்கிறதென்பது அறியக்கிடப்பதே. மாந்தர்களின் நல்லறிவென்னும் அணை திடப்படுங் காலத்துத்தான் அப் பிரிவினூடும் அந்நதி பிரவகிக்கும்.

இனி லௌகிக நெறியில் கல்வி கற்கும் இளஞ்சிறார் தத்தம் ஆசிரியர் வயப்பட்டுக் கிடத்தலின் இளமையில் அவ்வவர்கொண்ட ஆசிரியர் கையாளும் முறை வழியே சென்று கற்கலாகின்றனர். இவ் விளைஞரோடு பழகுறுமவர்கள் அவர் தம் நெஞ்சகத்து நல்லன, திருந்தப் பதியும் எந்த நன்முறைகளையேனும் தேர்ந்துபதேசிப்பதே சால உறுதி பயக்கும்.

விரகறிந்த பின்னர் பறவைக் குஞ்சுகள் தத்தம் விருப்பிற்கியையப் பறத்தல்போல வித்தியார்த்திகளும் தத்தம் புத்தியை நல்வழியில் பிரயோகித்துப் பல உண்மைகளைக் காண முயலுதல்வேண்டும். இம்முறை நடத்தல் குசாக்ரபுத்தியுடையார்க்கே எளிதின் இயலுமாதலின் இப்புத்திபடைத்தார் கற்றதோடு அமைவடையாமல் மேலுமேலுந் தாமே பல நுண்ணிய கருத்துக்களைக் கண்டறியத் துருவித் துருவி ஆய்தல்வேண்டும். கல்வி விஷயத்தில் உள்ளது போதுமென்னும் மனவமைதிகொள்ளல் தவறு. சற்றுமந்ததரமான மாணவரும் கற்றதைக் கருத்தே மறவாமல் நிறுத்தப் பழகிப் பின் பையப்பைய, முன்னோர் எவ்வெவ்வழி தம் கருத்துக்களை நிறீஇயுழைத்துள்ளனரென்பதைத் தேடவேண்டும். அங்ஙனம் செய்வதால் அறிவு துலங்கப் பெற்றுப் பற்பல உண்மைகளைக் காண்பர். இவ்விதம் செய்து சிற்சில உண்மைகளைக் கண்ணுற்றதும் இன்னம் அறிவுக்கெட்டாத பல உண்மைகளுளவென்னும் எண்ணத்தைக் கைசோரவிடலாகாது. அங்ஙனம் எண்ணுங்கால் தற்செருக்கென்னும் புதரால் மறைபட்டழிந்துபடுவான்.

கல்லாதமாந்தர், கற்ற இனத்தினரொடு மிகவும் பழகி, அவர்வாய் பல அறவுரைகளை உசாவியுணர்தல்மூலமாகவும் தாங்கள் கற்றல் இயலும். இதையே 'கேள்வியறிவு' என்பர். கற்றலிற் கேட்டலே நன்றென்பதும் ஆன்றோர் வாக்கே. இம்முறை கற்றார்க்கும் கல்லார்க்கும் பொதுவில் உடம்பாடாவதே. எனினும் கல்லார் பெரிதும் கொடற்குரித்து. கற்றார் இம்முறை சாருங்கால் தன்னினும் மேம்பட்டாரகத்தே கேட்கத் துணியவேண்டும். அவ்விதம் செய்வதால், தான் பல புதுமைகளையறிய நேருவதுடன், தானறியாத பல புதுமைகள் உளவென்னும் உணர்வும் தலைப்பட, அத்தலைப்பாடுஅகந்தையை வீழ்த்தும். ஒருக்கால் தாழ்ந்தோரைக் கூடின் 'இருண்டகல்லையும் பொன்னிறமாக்கிய விரதம்' எனக் கம்பநாடர் கூறுவதொப்ப, அத் தாழ்வினரைத் தம் நிலைக்கேற்ற முயற்சிகொள்ளவேண்டுமேயொழியத் தாம் தெப்பம்சார்ந்தகல்போலக் கனமிழத்தலாகாது.

தாம் அறிந்துகொண்டவற்றை ஒழுங்கும் ஏற்பும் செய்து, பலர்க்கும் உரைத்தல் வேண்டும். தம்மை நாடுவோர்க்குரைப்பதால், விஷயங்களை ஒழுங்குபடுத்துநெறியும், அவற்றை ஏற்கச் செய்யும் வழியும் நன்கு செப்பம் பெறும். கற்றகல்வியும் பசுமரத்தாணியன்ன மனத்திற் பதியும். கற்பிக்கு முறைகளும் நவநவமாய்ப் புலப்படும்.

ஓய்வுநேர்ந்துழி, தானறிந்தவற்றைச் சாவதானமாய்ச் சிந்தித்தல் வேண்டும். இதனால் ஞாபகசக்தி வளரும். மறதியென்பது மனிதனது புகழைக்கொல்லும் விரோதியெனவும், ஞாபகசக்தி ஒரு மனிதனுக்கு இகழ்வு வாராமல் தடுக்கும் பெருந்தகை நண்பன் எனவும் பெரியோர் புகன்றனர். எனவே கற்றல், கேட்டல், சிந்தித்தல் இம்முறைகளால் ஒரு நாட்டிலுள்ள எழுத்துணர்ச்சியுடையாரும் அஃதடையாரும் ஒருசேரக் கல்விமான்களாகத் திகழக்கூடும் என்பது பெற்றாம். சிந்தித்தபின்னர் தெளிவும், அதன்பின் அனுபவமும் அமைகின்றன. இவ்வனுபவஞானமே அசைக்கவொண்ணாத ஞானமாகும். நாம் நூல்களிற் காணும் பல நீதிகள், நம் முன்னோர்தம் அனுபவஞான ஈட்டங்களேயன்றி வேறல்ல. அனுபவஞானங்கொண்டு நிலைநாட்டப்படாத எவ்வுண்மையும், பிற்காலத்து அனுபவ ஞானியால் தகர்த்தெறியப்படும். அனுபவமில்லாவுண்மைகள் இன்மையின் உருவை உள்ளே கொண்டு உண்மைச்சட்டையை மேலேபோர்த்துக்கொண்டனவாகும். முடிவில் அவ்வுண்மை இன்மையாகும். இந்நெறிவழி நில்லாது கழகங்களிற் கற்றவளவோடு நின்று ஜீவன வாழ்க்கையையே பெரிதும் வேட்டு நடாத்தும் ஒருவன் உண்மைக்கல்விமுறை உருவாம் கலைமகளின் நன்றி கொன்ற மகனாவான். தவிர, கல்வி ஆராய்வோர், நம் நாட்டின்மீதுள்ள பற்று முதலிய காரணங்களால் அயல்நாட்டறிஞர் கூற்றுக்களை எள்ளுதலும் ஏழைமை யுடைத்தாகும். உண்மைக்கும் கல்விக்கும் தேச, கால வரையறையென்பனவில்லை. ஆகலின் அந்நிய தேயத்தினரால் நிறுவப்படும் பற்பல உண்மைகளையும் மனம

கிழ்ந்து ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். இங்ஙனம் ஒழுகாதான் கல்வி முறையில் நற்பயிற்சியும், கல்வி நிறைவும் எய்துதல் இயலாது.

## கலவிகற்கும் பருவம்.

நாம், நம் நாட்டு மக்கள், தம் பிள்ளைகளை ஐயாண்டளவில் முதலாகக் கல்வி கற்கவைப்பதைப் பார்க்கிறோம். வேறு சில நாடுகளில் பன்னீராட்டைப் பருவத்தே கல்விகற்கச் செய்வதே விழுமிது என விளம்புவர். கற்கவேண்டிய கல்வி மிகுதி. கற்பதற்குரியவாழ்நாள் சில. அதனுள்ளும் இடையூறுகள் பல. ஐயாண்டுமுதற பன்னீராண்டளவும் மக்களைத் தீநெறிப் படாமற் பாதுகாத்தலும் அரிது. இன்னோரன்ன பற்பல காரணங்களை யொட்டியே நம்மவர் கல்வி கற்பிக்க ஐந்தாண்டினை எல்லை செய்தனர். நெட்டுருவேற்றாமல், விஷயங்களைத் தானே புணர்ந்து பதிக்கும் சுயஞானம்வாய்ப்பது வரையில் காத்திருத்தல், சிறுவர்கட்குக் கல்வியை விரைவில் கற்பிப்பான் தொடங்கியேயாம். இலகுமுறையில் கற்பிப்பதில் இளம்பிராயத்தே கல்வி தொடங்கல் இழுக்கன்று. கற்கவேண்டுமென்ற அவா மக்கட்கு உண்டாகும் பருவமே கற்குந்துறைப்படுத்தற் கேற்ற பருவமாம். அவ் வவா இல்லாதாரைப் பெற்றோர் வலிந்து புகுத்தலும் தீதன்று. எவ்வாற்றானும், கல்வி பயிலுதற்கு இளமைப் பருவமே ஏற்புடையது. இப் பருவத்தே, விஷயங்களையறியும் ஆவலும் கவலை யின்மையும் குடிகொண்டிருத்தலாலும், கற்றது கற்றபடி உள்ளத்தமைவதாலும், இதனினும் ஏனைப்பருவங்கள் ஏற்புடையனவாகா. ஞாபகசக்தி குன்றப்பெறும் முதுமை முதலிய பருவங்களில் கற்றது அழுத்தமாய்ப் பதிவதூஉமின்று. அன்றிப் பதிந்தது நெடுநாட் டங்கலுமின்று. இதனால் முதியோர் கல்வி கற்க உரியோரல்லரெனக் கோடல் நன்றன்று. இளமையைக் கல்வி நலம் பெறவிடாது வறிதேகழித்தோர் எவரும் மேற்கூறியாங்கு எக் கல்விமுறையினைக் கோடல் கூடுமோ அதனைக் கைக்கொண்டு இயன்றவண்ணம் நிரப்பிக்கொள்வதே யுக்தமாம். 'இளமையில் கல்' என்பது ஆன்றோர் வாக்கு. எவனும் சாந்தனையும் வடது கைவிடாது பயிலல் வேண்டும் என்பது மேன்மக்கள் துணிபு.

## கல்விப் பயன்.

கல்வியின் பெருமை அளப்பரிதாம். கற்றோர் பெருமையும் அவ்வாறாம். கல்வி, மக்களறிவை விலங்குநெறிப்படாவண்ணம் திருப்பித் தூயநெறிப்படுத்துகிறது. படிப்பில்லாதவரை விலங்கென்று பெரியோர் பரிகசிப்பது கவனிக்கத்தக்கது. மனிதனுக்கு அவனது வாழ்வின்கண் நேரும் இன்னல்களைக் களைந்தெறியும் பேரறிவினையும் பெருக்கித் தருகிறது. சிற்றுயிர்க்குற்றதுணை கல்வியே யென்பர்.



எழுமையும் ஏமாப்பளிக்கும் என்றும் கூறியுளர். கற்றோர் மற்றோர் யாவரினும், மன்னரினும் ஏற்றமுடையவனாவான். அறிவுடையோனாறு அரசுஞ்செல்லும். உலகக்கல்வி இம்மைப் பயனையும் தெய்வக்கல்வி மறுமைப்பயனையும் தருகின்றன. கல்லாமுதியனும் இளையவனாகிறான் அறிவு வகையில். கற்ற இளைஞன் கனகிழவனாகிறான். யாதானும் நாடாம். யாதானும் ஊராம். வித்வான் பிரமனினும் சீரியவன். வித்வானின் படைப்புப்பொருட்களாய நூல்கள் அழிவனவல்ல. பிரமன் படைப்புப்பொருட்கள் அழிவை உடையன. கல்லாதவர் வீடில்லாதவர். கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன். ஈசன் கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி. கல்வி ஒழுக்கத்தை ஓம்பும் தாய். தெய்வ ஞானத்தை வளர்க்கும் தந்தை. அன்பை வளர்க்கும் மக்கட்பேறு. ஈறிலின்பநெறி காட்டும் ஆசாரியன். பேரின்பத்தாழ்த்தும் பெம்மான். ஒருவித்திலிருந்து செடி தோன்றுகிறது. அச்செடி வலிய பல கிளைகளாகக் கிளைத்து மரமாகிறது. அதன் பின் இலைகள் தழைத்து அரும்புகளைப் பெறுகிறது. பிறகு மலர்கிறது. முடிவில் பழத்தைத் தருகிறது. ஒரு வித்து பல பழங்களாகிய பலனை நல்குவது யாவரும் அறிந்த விடயமே. இதுபோலவே, கல்வியால் கேள்வி விளைகிறது. கேள்வி யென்பது, பெரியோர்பால் பற்பல அறவொழுக்க வுரைகளைக் கேட்டறிவ தொன்றோடன்றி, 'நானார்? என் உள்ளமார்? என் ஞானங்களார்?' என்பன முதலிய ஆன்ம விசாரமுமாம். கேள்வியால் தவவொழுக்கம் உண்டாகிறது. தவத்தால் அன்பு வளர்கிறது. அன்பின் முதிர்ச்சியால் தருமம் பெருகுகிறது. தருமத்தின் பயனாகப் போகம் சித்தியாகிறது. எனவே கல்வி என்னும் வித்து போகமென்னும் ஈறிலின்பப் பலத்தை வழங்குகிறது. இதே விஷயத்தைக் கம்பநாடர்,

'ஏகம் முதல் கல்வி முளைத்தெழுந்து, எண்ணில் கேள்வி
ஆகம் பணைத்திண் கவர் போக்கி, அருந் தவத்தின்
சாகம் தழைத்து, அன்பரும்பித், தருமம் மலர்ந்து,
போகம் கனி ஒன்று பழுத்தது போலு மன்றே'

என நன்கு உருவப்படுத்திக் கூறியிருப்பது உய்த்துணரற்பாலது. கல்வி இல்லையேல் இப் பயன்களும் இலவாம். நல் கல்வி யுடையார் இப் பயனனைத்தும் நண்ணுவர். அக் கல்வி யில்லார் இவையனைத்தும் இழந்து இன்னலுறுவர். இதனையே,

'கல்லாதார் மனத் தணுகாக் கடவுள் தன்னைக்,
கற்றார்கள் உற்றோரும் காதலானை,
பொல்லாத நெறியுகந்தார் புரங்கள் மூன்றும்
பொன்றிவிழ அன்று பொருசரங் தொட்டானை,

*இல்லாத இணக்குரம்பைப் பிணக்கம் நீங்க*
*நிறைதவத்தை அடியேற்கு நிறைவித்து என்றும்*
*செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானைச்,*
*செங்காட்டங்குடியதனில் கண்டேன் நானே,*

என நாவுக்கரசு சுவாமிகள் வேதவாக்கால் உணரலாம். ஈசன் கல்லாதவர்க்கு எட்டாதவர் என்பதைக் கடவுள் என்னும் சொற் பிரயோகத்தாலும், கற்றவர்க்குக் கேள்விஞான விளைவு நிகழ்வதை ஓதும் என்பதனாலும், இம் மெய்ஞ்ஞானக் கல்வி யுடையார்க்குக் கடவுள் கிட்டுகிறான் என்பதனைக் காதலானை என்பதனாலும், கல்லார் அடையும் இன்னலைத் திரிபுரத்தார் போன்றியதைக் குறித்தலானும், கல்வி கேள்வியால் தவஒழுக்கம் விளைவதை நிறைதவத்தை என்பதனாலும், அன்பு தருமமாகிய நிரம்பப் பெறுதலை நிறைவித்து என்பதனாலும், போகப்பயனைச் செந்நெறிச் சேறல் என்பதனாலும், ஒவ்வொரு சொல்லினிடத்தும் அநுபவஞானம் ததும்பி வழியுமாறு அச் சுவாமிகள் கூறி, இறுதியில் கண்டேன் எனவும் உறுதி கூறலது ஆராய்ந்தறிய வேண்டுவதாகும். இங்ஙனமின்றி, பிற பயன்களை விழைத்தலும், குறிக்கோளாக் கோடலும் தீதென்பதை நாயனார், தமது தமிழ்மறையகத்தே, 'கற்றதனால் ஆய பயன் என் கொல்? வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்' என நன்கு வற்புறுத்திக் கூறியுமுள்ளார். ஞானமயனாகிய ஈசுவரனை ஞானத்தை அடைவிக்கும் உபாயமாகிய கல்வியாலன்றி வேறெதனாலும் அடைதல் சாத்தியமாகாது. ஞானத்தால் கிடைப்பது இன்பமே யாதலால், கல்வியாற் கிடைப்பதும் அப் பேரின்பே யென்பது பெற்றாம். இதனினும் பெறத்தக்க பேறு வேறு யாதுளது?

ஆகவே, உலகினர் யாவரும்—ஆடவர் மகளிர் இருதிறத்தாரும்—கல்வியைப் புறக்கணியாது கொண்டு, ஓம்பி, முடிவி லின்பப்பேறெய்தல்வேண்டுமென்பதே இவ் வென்னற்பக்கட்டுரையின் பெருவேட்கையும், உட்கருத்துமாம் என்பதனோடு முடிக்கின்றேன்.

---



பராசர்:—பெண்ணே! ஒன்றை ஸஹிப்பதோ வெறுப்பதோ மனஸே அல்லாது பதார்த்தமல்ல. ஆகவே, அதைப் பற்றி நீ கவலையடையவேண்டாம். உனக்கு வேண்டிய வரங்களை அளிப்பேன். பிராம்மணவமானம் செய்யாது என்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்வாய்.

ஸத்யவதி :— ஐயோ சாமி! பிராமணனைத் தொட்டாக்கே கண்ணவிஞ்சு போயிடாதா? அதிலேயும் நீங்களோ ரிஷி. உங்ககிட்ட வந்தாக்கூட நாங்க எரிஞ்சு சாம்பலாய் போய்விடமாட்டோமா?

பராசர்:—அவைகளெல்லாம் எங்களிஷ்டமில்லாமலிருக்கும் ஸமயந்தான். ஆகவே, நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். காலதாமதஞ்செய்யாது அதோ அந்த திட்டின் ஸமீபம் படகைச் செலுத்து. உனக்கு ஸர்வ மங்களங்களுமுண்டாகும்.

ஸத்யவதி:—ஐயோ சாமி! நான் இன்னம் பெரியமனுஷிகூட ஆகவில்லையே! நீங்கள் இப்படிச் சொல்லலாமா?

பராசர்:— உன்னை என் தபோமஹிமையால் ருதுவானவளாகச் செய்துகொள்ளுகிறேன்.

ஸத்யவதி:— பிறகு சாமி நான் வீட்டுக்குப் போனால் எடுத்துக்குவாங்களே தொடப்பக்கட்டையை. வேண்டாம் சாமி.

பராசர்:— நீ அதற்காக அஞ்சவேண்டாம். என் மனோபீஷ்டம் பூர்த்தியான உத்தரக்ஷணம் உன்னை இப்பொழுதிருப்பதுபோல் கன்னிகையாக மாற்றிவிடுகிறேன். பெண்ணே! இப்படகு இவ்விடத்திலேயே நிற்கும். இறங்குவாய் இத் திட்டில். (தான் முன் இறங்கி, அவளிறங்கும்பொழுது, அவளை தீர்த்தத்தால் ப்ரோக்ஷிக்க அவள் யுவதியாக மாறுகிறாள்.) ப்ரியே! (அவள் கரத்தைப் பற்ற, அவள் வெட்கத்தால் தலை குனிகிறாள்.) ஸங்கோசத்தைவிடு. இதோ இத் திட்டின் மணலில் உட்காருவோம்.

ஸத்யவதி:— ஸ்வாமி! அக்கரையில் நிற்கும் ஜனங்களைப் பாருங்கள். அவர்கள் இப்படகை நோக்கியே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னம் மற்ற ரிஷீச்வரர்களும் பார்த்துக்கொண்டிருக்க இவ் வெட்டவெளியான இடத்திலா...

பராசர்:— இவ்வளவுதானே. இதோ பார். இத்வீபத்தைச் சுற்றி பனியால் மறைக்கிறேன். (நாலாபக்கமும் பனி மூட) கண்ணே! இனி அரைக்ஷணங்கூட என்னால் பொறுக்கமுடியாது. உட்கார்.

---

## ஸீன் 2.

இடம்:— யமுனாநதித் திட்டு.

[த்வீபில் பராசர், ஸத்யவதி, வ்யாஸர் இருக்கிறார்கள்.]

பராசர்:— பெண்ணே! பிராம்மணன் வாக்கை உல்லங்கனஞ் செய்யக்கூடாதென்ற தர்மத்தையே முக்யமாகக் கொண்டு, என் அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்ததால் நான் மனமகிழ்ந்தேன். உன் வயிற்றில் ஜனித்த இவன் மஹா வேதபாரங்கதனும், பெரிய க்ரந்தகர்த்தாவாயும், சதுர் வேதங்களுக்கு ஸமானமான ஐந்தாவது வேதத்தை ஏற்படுத்தப்போகிறவனும், மூன்று உலகங்களிலும் கொண்டாடப்படும் கீர்த்திமானும் விளங்கப்போகிறான். இவனை நானே அழைத்துச் செல்லுகிறேன். நீ அவனை ஸ்மரிக்கும்ஸமயம் அவன் பிராப்தமாவான். பெண்ணே! நீ செம்படவ ஜாதியில் பிறந்தவளல்ல. ஓர் கந்தர்வனின் புதல்வி. மத்ஸ்யத்தின் வயற்றில் நீ உண்டானதால் உன்னிடம் இந்நாற்றம் ஏற்பட்டிருக்கிறது. உன்னை ஓர் அரசன் பாணிக்கிரஹணம் செய்யப்போகிறான். பெண்ணே! உனக்கு வேண்டிய வரன்களை என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் கேள்.



ஸத்யவதி:— ஸ்வாமி! என் சரீரமானது நூறு யோசனை விஸ்தீர்ணம் நாறுவதானது மாறி நூறு யோசனை விஸ்தீர்ணம் பரிமளம் வீசவேண்டும். எனக்கு இத்தோஷம் ஏற்படக்கூடாது. என்னை பிறர் ஸந்தேஹிக்க முடியாதபடி என்னை முன்போல் செய்யவேண்டும்.

பராசர்:— பெண்ணே! உன்னிஷ்டப்படியே ஆகும். காலதாமதமாகிறது. வா; படகிற்குப் போவோம். (தீர்த்தத்தால் அவளை ப்ரோக்ஷிக்க ஸத்யவதி முன்போல் மாறுகிறாள்) உம் படகைச் செலுத்துவாய்.

---

# Act IV.

## ஸீன் 1.

இடம்:— சந்தனு அரண்மனை.

[சந்தனு ஓர் ஆஸனத்தில் வீற்றிருக்கிறான்.]

சந்தனு:— (தனக்குள்) ஆஹா! ஆதியில் என்னிடம் இக்கடோரமான நிபந்தனைகளைக் கேட்குங்கால் "ராக்ஷஸ ஸ்திரியாய் இருந்தபோதிலும், தான்பெற்ற குழந்தையைக் கொல்ல மனங்கொள்ளாள்; இவளிடம் எனக்கு அதிகப்பற்றுதல் இருக்கவேண்டியே இவ்வாறு கேட்கிறாள்." என்று எண்ணி அவளுக்குடன்பட்டு ப்ரமாணஞ் செய்துகொடுத்ததாலல்லவா இவளது பாப கிருத்யத்தை தடுக்கமுடியாமலிருக்கிறேன். ஐயோ! ஒரு புத்திரனல்ல, இரண்டு புத்திரர்களல்ல, ஏழு புத்திரர்களை கங்கையில் அமிழ்த்திவிட்டாள். ஐயோ! இதற்கு காரணம் இன்னதென்றுகூட கேழ்கக்கூடாதென்று கேட்டுக்கொண்டிருக்கிறாள். ஹா! ஜகதீசா! இதாவது புத்திரியாய் பிறக்கலாகாதா? [விதூஷகன் வருகிறான்.] (பிரகாசமாய்) மாடவ்யா! எங்கு சென்றிருந்தாய் இந்நேரம்?

விதூஷகன்:— ஓரிடமுமில்லை மஹாராஜா; நேரே வீட்டிலேயிருந்துதான் வரேன்.

சந்தனு:—இன்னேரம் என்ன செய்தாய் வீட்டில்? உன்னை எப்பொழுதே வரச்சொன்னேன்?

விதூஷகன்:— அதையேன் கேட்கிறீர்கள் மஹாராஜா? நமக்கென்ன ஸம்ஸார மிருக்கிறளா அதிகாரம் பண்ண? மன்னிக்கு மனஸ்வந்தால் சமயல் காலாகாலத்திலே. இல்லாட்டா அன்னிக்கு 25-நாழிகைதானே. இப்பொதான் பொம்மனாட்டிகளுக்கு துணிச்சல் ஜாஸ்தியாய்ப்போய் விட்டதுஉங்களாலே.

சந்தனு:— என்னாலா? எப்படி?

விதூஷகன்:— ஏன்னால், ஆம்படையான் தப்பித்தவறி கோவிச்சுக்கொண்டானே, பிள்ளையைத்தூக்கி கிணத்தில் போட்டுடுவேனென்று பயமுறுத்துகிருள்.

சந்தனு:—ஹா! நண்பா! நீ சொல்வது வாஸ்தவமே. "யதா ராஜா ததா ப்ரஜா" என்பது போல், என்னால்தான் அவர்கள் அவ்வாறு சொல்லத் துணிந்துவிட்டார்கள்.

(ஓர் சேவகன் ஓடிவருகிறன்.)

சேவகன்:— மஹாராஜ்! மஹாராணி அவர்களுக்கு ஸுகப்ரஸவமாகி புத்திரன் பிறந்திருக்கிறதாக ஸமுகம் தெரிவிக்க உத்தரவாயிருக்கிறது.

சந்தனு:—ஸரி; மந்திரியிடம் இச்சமாசாரத்தை தெரிவித்து அவரை இங்கு வரும்படி சொல்.

சேவகன்:— உத்தரவு. [போகிறன்.]

(விதூஷகன் விம்மிவிம்மி அழுகிறன்.)

சந்தனு:— நண்பா! எதற்காக திடீரென்று அழுகிறய்?

விதூஷகன்:— மஹாராஜாவுக்கு இதுவும் பிள்ளையாய்ப் பிறந்துவிட்டதே யென்று.

சந்தனு:— ஆம் நண்பா! எனக்கும் துக்கமாய்த்தானிருக்கிறது.



விதூஷகன்:— மஹாராஜா! நானப்பொவே சொன்னேனே இது பிசாசின்னு. என்னை நம்பமாட்டேனுட்டைளே. இந்த அக்ரமம் யாராவது செய்வாளா? ராஜ்யம் முழுவதும் இது ஒரு பேச்சாகி உங்களை இது விஷயமாய் நிந்திக்காதவர்கள் கிடையாது.

சந்தனு:— நண்பா! நான் இனி ஸகியேன். இனி இச்செய்கைக்குடன்படேன், எது நேர்ந்தபோதிலும் இத்தடவை தடுத்தே தீருவேன். இது நிச்சயம்.

விதூஷகன்:— அப்பா! எழுகுழந்தைகளைக் காவு கொடுத்த பிறகுதான் இது தோணவேண்டுமோ?

சந்தனு:— என்ன செய்வது? விதியை விலக்க யாராலாகும்? இக் குழந்தை ஒன்றுவது ஸந்ததி விருத்திக்காக இருக்கட்டும் நண்பா! (எழுந்து) நான் வருகிறேன்.

விதூஷகன்:— நானும் விடைபெற்றுக்கொள்ளுகிறேன்.

சந்தனு:— ஸரி போய்வா. [போகிறன்.]

விதூஷகன்:— அப்பா ராஜ்யத்திற்கு நல்லகாலம் பிறந்தது. [போகிறன்.]

---

## ஸீன் 2.

இடம் :—கங்கைக்கரை ஓரம்.

[கங்கை குழந்தையை கையிலேந்தி கங்கையை நோக்கி வருகிறள்.]

சந்தனு:— (உள்ளிருந்தபடியே) ஹே! கங்கா! போகாதே, நில்; நில்! பாபி! குழந்தையைக் கொல்லாதே. நில்;நில்.

கங்கை:— (திடுக்கிட்டு நின்று) ஆஹா! என்ன ஆச்சர்யம்! இதுவரையில் என்னைத் தடுக்காதவர் இப்பொழுது என்னைத் தடுக்கக் காரணம் என்ன? (சற்று யோசி

(…ந்து) ஸரிதான். நாம் வந்த கார்யம் முடிவடையும் காலம் ஸமீபித்துவிட்டதென்பதை மறந்தேன்.

**சந்தனு:—** (வெளியில் வந்து) அடி பாவி! என் ஏழு குழந்தைகளையும் கொலைசெய்தகொடும்பாவி! இதுவரையில் காமம் என்னும் காலபாசத்தால் கட்டுண்டதால் உன் கொரச் செய்கைகளைத் தடுக்க முடியாமலிருந்துவிட்டேன். என் புத்திரர்களை ஏன் கொல்லுகிறாய்? நீ யாரைச் சேர்ந்தவள்; பேயோ அல்லது பிசாசோ?

**கங்கை:—** ராஜன்! ஏன் வீணாக பதறி வாயில் வந்தபடி பேசுகிறீர்? நீர் செய்துகொடுத்த ப்ரதிக்ஞைக்கு கட்டுப்பட்டும், என்னைத் தடுத்தால் நான் உம்மை விட்டுப் பிரிவேனென்று சொன்ன வார்த்தைக்கு அஞ்சியும், மௌனமாயிருந்துவிட்டு இப்பொழுது ஏன் கடிந்து பேசுகிறீர்? உமக்கு புத்ர வாத்ஸல்யம் இப்பொழுதுதான் ஏற்பட்டது போலும்! அதை எனக்கு முன்பே அறிவித்திருந்தால் நான் இவ்வளவு தூரம்கூட வந்திருக்கமாட்டேனே. ராஜனே! இனி உமக்கு இப் புத்திரன் விஷயத்தில் பயம் வேண்டாம். இது ஸத்யம். ஆனால், நாம் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி நமது ஸ்நேஹமும் இன்றுடன் முடிந்தது. ராஜன்! தாம் ஸந்தேகிக்கிறபடி நான் பேயுமல்ல பிசாசுமல்ல. ஜன்ஹு மஹரிஷியின் புத்திரியும் மஹரிஷிகளால் ஆச்ரயிக்கப்பட்ட ஜான்னவியாகும். அஷ்டவஸுக்களுக்கு வாக்களித்ததை நிறைவேற்ற எடுத்த மானிட ஜன்மம் இது. இப் புத்திரர்கள் எட்டுப்பேர்களும் அவர்களே. உமது முன் ஜன்மத்தில் பிரம்ம ஸபையில் நீர் என்பேரில் மோஹங் கொண்டதால் உமக்கு மனைவியானேன். என் வாக்கும் நிறைவேறியது. உமது ஆசையும் தீர்ந்தது. என்னை பார்யையாயடைந்ததற்கு இப் புத்திரனும் உமக்கேற்பட்டுவிட்டான். இக் குழந்தை பெரியவனாகும் வரை என்னிடமிருக்கட்டும். பிறகு உம்மிடம் வருவான். நா



னும் நீர் வேண்டும்பொழுது வருகிறேன். எனக்கு விடை அளியும்.

**சந்தனு:—** ஆ! ஸுந்தரி! உன்னைவிட்டு நான் எவ்வாறு உயிர் தரித்திருப்பேன்? புத்திர வாத்ஸல்யத்தால் நமது உடன்படிக்கையை மறந்து உன்னை வாயில்வந்தபடி பேசிவிட்டேன். என்னை மன்னித்து என்னுடன் வருவாய்.

**கங்கை:—** மஹாராஜா! என் பேரில் வைத்த காதலை ஒழியும். இறந்தவள் எவ்வாறு திரும்பி வரமாட்டாளோ, அதுபோல் நான் இனி இங்கிருப்பது முடியாதகார்யம். நீர் ஸுகமாய் மற்றொரு ஸ்திரீயை பாணிக்ரஹணஞ் செய்துகொண்டு இல்லறத்தை ஈடேற்றும். வீணாக வருத்தப்படாதீர். என்னை மன்னியும். (சொல்லிக்கொண்டே கங்காநதியில் இறங்கி மறைகிறாள். சந்தனு மூர்ச்சையாகிறான். ஸாரதியும் சேவகனும் ஓடிவந்து சைத்யோபசாரஞ் செய்கிறார்கள்.)

---

## ஸீன் 3.

### இடம்:—சந்தனு சயனக்கிரஹம்.

[சந்தனு ஓர் சயனத்தில் சாய்ந்துகொண்டிருக்க விதூஷகன் பக்கத்தில் ஓர் ஆஸனத்தில் வீற்றிருக்கிறான்.]

**விதூஷகன்:—** என்ன மஹாராஜா! பதினைந்து வருஷங்களாயும் கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து மனதை த்ருடப்படுத்திக்கொள்ளாமல் ஸதா அவளையே நினைத்துக்கொண்டு துக்கத்திலிருப்பது ஞாயமா? அவளோ ஏதோ தெய்வகார்யத்தை நிறைவேற்ற உம்மை அடைந்தாள். "கார்யமாகும் வரையில்தான் காதல்" என்ற கொள்கையைக் கொண்ட தாஸியைப்போல், அவள் வந்த கார்யமானதும் போய்விட்டாள்.

**சந்தனு:—** சீ மூடா! யாரைப் பார்த்து தாஸி என்கிறாய்?

விதூஷகன்:— பின் என்ன மஹாராஜா? தாஸிகளுக்குக்கூட நீங்கள் படுகிற அவஸ்தையைப்பார்த்தால் ஒரு வேளை மனமிறங்கினாலும் இறங்கும்போலிருக்கிறது.

சந்தனு:— ஐயோ! அவளென்ன செய்வாள்? அவள் ஜென்மம் அவ்வளவு காலந்தான். அது முடிவடைந்துவிட்டால் அவளென்ன செய்வாள்? நான் எந்த ஸமயம் நினைத்தாலும் பிராப்தமாவாள்.

விதூஷகன்:— அப்படியென்றால் அடிக்கடி வந்துபோய்க்கொண்டிருக்கச்சொன்னால் என்ன?

சந்தனு:— என்ன மூடனாயிருக்கிறாய்! அவள் வந்தாலும் அவளை என் பார்யையாக பாவிக்கலாமோ? ஸகல பாபத்தையும் தீர்க்கக்கூடியவளும் மஹரிஷிகளாலும் நமஸ்கரிக்கப்பட்டவளுமல்லவா?

விதூஷகன்:— அப்படியென்றால் "கிட்டாதாயின் வெட்டென மற" என்பதுபோல் அவளை மறந்துவிடாமல் ஏன் இவ்வாறு கஷ்டப்படுகிறீர்கள்?

சந்தனு:— நீ ஸுலபமாய் சொல்லிவிட்டாய். எனக்கு அது அஸாத்யமான கார்யமாகவல்லவோ இருக்கிறது.

விதூஷகன்:— நீங்கள் இப்படியே இருந்தால் என்னமாய் மறக்கும்?

சந்தனு:— என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?

விதூஷகன்:— எதைச் செய்தால் இது மறந்துபோமோ அதைச் செய்கிறது.

சந்தனு:— என்னது? விளங்கச்சொல்.

விதூஷகன்:— மூத்தாள் போன துக்கம் இளையாள் வரும் வரையில்தான்.

சந்தனு:— ஆ! இனி என் ப்ராணஸகியை அனுபவித்த இச்சரீரம் மற்றொருவளை அனுபவிக்குமா? தேவ கன்னிகையை ஸ்பரிசித்த இக்கரம் மனுஷ்ய ஸ்திரீயைத் தொடுமா? ஒருநாளுமில்லை.



விதூஷகன்:— இப்படிச் சொன்னவர்கள் அனேகம் பேர்கள். அடடா! கேட்பானேன் வைராக்யத்தை.

சந்தனு:— அடே! கேவலம் ஸாமான்யனைப்போல் என்னையும் எண்ணிவிட்டாயல்லவா? அது உன்பேரில் குற்றமில்லை. உனக்கு தகுந்தபடிதானே உன் புத்தியுமிருக்கும்.

விதூஷகன்:— இதற்கு புத்தியே வேண்டாம். உலகமே இப்படித்தான். அதில் தப்புகிறவர்கள் ஒருவருமே இல்லை. அது போகட்டும் மஹாராஜா! எல்லாதேசத்தின் அரசகுமாரிகளின் படங்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை இப்போதுகொண்டு வரட்டுமா?

சந்தனு:— எதற்கு? எனக்கு ஒரு படமும் பார்க்கவேண்டாம்.

விதூஷகன்:— பாருங்களேன். உங்களுக்குப் பிடித்தால்தானே எல்லாம்.

சந்தனு:— நண்பா! குட்டிச்சுவற்றில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா? இனி என் மனம் வேறு ஸ்திரீயிடம் நாடாது. நானிப்படியே இருந்து என் பிராணனை விடவேண்டியதே ஒழிய வேறு வழியில்லை.

விதூஷகன்:— மஹாராஜா! இப்படி பிடிவாதம் பிடித்து உயிரைமாய்த்துக்கொள்வது க்ஷத்திரியர்களுக்கழகா? நான் அப் படங்களை எடுத்துவருகிறேனிப்போது (எழுந்திருக்கிறான்).

சந்தனு:— வேண்டாம்; வேண்டாம்.

விதூஷகன்:— ஏன் மஹாராஜா? ஒரு ஒரு தேசத்து கன்னிகைகள் எப்படியிருக்கிறார்களென்று இப்படி வேடிக்கையாய் பார்ப்போமே.

சந்தனு:— எனக்கு வேண்டாம் வேடிக்கை. நீ வேண்டுமென்றால் பார்த்துக்கொண்டிரு.

[ஓர் சேவகன் வருகிறான்]

சேவகன்:— மஹாராஜ்! மந்திரி வரலாமாவென்று ஸமூக மறிந்துவரச் சொன்னார்.

சந்தனு:— வரச்சொல். (சேவகன் போகிறான்)

விதூஷகன்:— ஸரி, ஸரி. நல்ல சகுனமாகிறது. "கும்பிடப் போனதெய்வம் குறுக்கே வந்ததாம்" என்பதுபோல் மந்திரியே நேரே வாரார்.

[மந்திரி வருகிறான்.]

சந்தனு:— மந்திரி! அமருவீர் என்ன விசேஷம்?

மந்திரி:— மஹாராஜ்! துஷ்டமிருகங்கள் பயிர்களை அழிப்பதாக குடிகள் முறையிடுகிறார்கள்.

சந்தனு:— அப்படியா மந்திரி! ஸேனாதிபதியிடம் தெரிவித்து வேடர்களுடன் நாளை புறப்படத்தயாராயிருக்கும்படி சொல்லும். நான் நாளையதினமே புறப்படுவதாக ஜனங்களுக்கு அறிவியும்.

மந்திரி:— மஹாராஜா! மனக்கவலையால் உடம்பு அஸௌக்யமாயிருக்கிறதே. சேனாதிபதியை மாத்திரம் அனுப்பினால் போதாதா?

சந்தனு:— மந்திரீ! என் கவலை என்னுயுள் உள்ளவரை போகப்போகிறதில்லை. வேட்டையில் மனதைச் செலுத்தும் ஸமயமாவது, சற்று ஆறுதலுண்டாகலாமே என்று பார்க்கிறேன்.

மந்திரி:— ஆம் அதுவும் வாஸ்தவமே. நான் வரவா?

சந்தனு:— ஸரி; போய்வாருங்கள்.

[மந்திரி போகிறான்.]

விதூஷகன்:— உம்! உம்! மந்திரிவாளுக்கின்னா.
(மந்திரி திரும்ப, மஹாராஜாவிடம் ரஹஸ்யமாக)
இப்போ அனுப்பச் சொல்லட்டுமா?

சந்தனு:— சே! வேண்டாம். பேசாமலிரு.

மந்திரி:— என்ன விதூஷகரே! கூப்பிட்டீர் பிறகு ஒன்றும் சொல்லாமல் நிறுத்திவிட்டீரே. என்ன விசேஷம்?



விதூஷகன்:— இல்லை. மஹாராஜாவை வேட்டைக்குக் கிளப்பிவிட்டீர்: அவரோ என்னை அழைத்துச் செல்லாமல் போகமாட்டார். ஏனென்றால், நம்மை அழைத்துக் கொண்டு போனால் அவருக்கு அதிருஷ்டமாயிருக்கு. அதனாலே, அவர் திரும்பிவர வரையில் காணும்படியாய் அவ்வளவு பக்ஷணங்கள் பண்ணித்தரவேண்டுமெனக்கு. இல்லாதபோனால் நம்மாலே ஸாத்தியப்படாது. இப்பொவே சொல்லிவிட்டேன். நமக்கு இன்னு ஒரு வண்டி அலாதியாய் வரவேண்டும்.

மந்திரி:— ஸரி; அப்படியே ஆகட்டும். [போகிறான்]

சந்தனு:— நண்பா? என்ன உன்னை அழைத்துபோனால் அதிருஷ்டம்?

விதூஷகன்:— என்னை அழைச்சுக்கொண்டு போனபோது தானே தங்களுக்கு விவாஹமாச்சு. இப்பவும் எந்த மான் அஹப்படப்போகிறதோ?

சந்தனு:— ஸரி; ஸரி நீ போய் என்னுடன் புறப்பட தயார்செய்துகொள்.

விதூஷகன்:— தயாரென்ன நமக்கு. கத்தியா கபடாவா? அரைவேஷ்டியைக் கட்டிக்கொண்டு மேல்வேஷ்டியை உணத்தாது. அது உணர்ந்ததும், இந்தத்தோச்சு ஒணத்தரது. வேறென்ன? நான் வருகிறேன்.

---

## ஸீன் 4.

இடம்:—யமுனைக்கரை.

[சந்தனுவும் விதூஷகனும் வருகிறார்கள்.]

சந்தனு:— நண்பா! இந்த யமுனாநதிக்கரை ஸமீபம் வந்த மாத்திரம், இதன் குளிர்ந்த ஜலக்காற்றால் எனக்கிருந்த களைப்பும் தாகமும் கொஞ்சம் தணிவடைந்து, என் மனதிர்க்கோர் உத்சாகத்தைத் தருகிறது ஆஹா! என்ன மனோரம்யமான ப்ரதேசம்! தீரா வியாதியால் வெகுகாலம் கஷ்டப்படும் வ்யாதியஸ்

தன் இப்பிரதேசத்தில் சில காலம் வஸிப்பானாகில் அவன் ரோகம் தீர்ந்துவிடுமென்பதற்கு ஸந்தேஹமில்லை. நண்பா! வா போவோம்; தீர்த்தம் அருந்தி நமது களையை ஆற்றுவோம்.

விதூஷகன்:— மஹாராஜா! உங்களுக்கு இந்த ஆற்றைக் கண்டதும் ஆனந்தமுண்டாயிருக்கிறது; எனக்கோ ரொம்ப துக்கமாயிருக்கிறது.

சந்தனு:— ஏன்?

விதூஷகன்:— பாளயத்திலிருக்கும் பலஹார வண்டியை கொண்டுவாராமல் போய்விட்டோமேயென்று. இதோ பாருங்க மஹாராஜா! அரிச்சோடுகிறஇடத்தில் நின்று கொண்டு, ஒரு விள்ளல் தோசையும் ஒரு கை தீர்த்தமுமாய் சாப்பிட்டால் என்ன பிருமானந்தமாயிருக்கும்? ப்சு! குடுத்துவைக்கவேண்டாமா எதற்கும்.

சந்தனு:— ஸதா திண்டி! வா, போவோம்.

[போகிறார்கள்.]

[ஸத்யவதி வருகிறாள்.]

ஸத்யவதி:— என்னைத் தவிர வேறு மகப்பேறில்லாத என் பிதாவின் வாக்கை பரிபாலனஞ்செய்து அவரை ஸந்தோஷப்படுத்துவதற்காக இத் தொழிலை யான் யாதொரு குறைவின்றி வெகு சிரத்தையுடன் இவ்வளவு காலம் செய்து வந்தும், கொஞ்ச நாளாக இதில் உத்ஸாகமானது குறைவுபட்டுக்கொண்டுவருகிறது. காரணம், அனங்கனால் ஆக்ரமிக்கப்பட்ட எனது யெளவனமே. ஏனெனில், ஸ்வல்பகால முள்ளதும் நாளுக்கு நாள் குறைந்துபோகக்கூடியதுமான யெளவனமானது நாதனில்லாது கழிக்கப்படுகிறதே என்ற ஏக்கமானது கொஞ்ச காலமாய் என் மனதை வாட்டுகிறது. ஆனால், என் பிதா கவனிக்காமலிருக்கின்றானே யென்றால், அவர்பேரிலும் குற்றமில்லை. என் தோழிகள் மூலமாய் என் மனதை அறிந்துகொண்டதால், அவர் ஒன்றும் செய்யமுடியாமலிருக்கிறார்.



"முடவன் கொம்புத்தேனுக்காசைப்படுவதுபோல்" செம்படவப்பெண்ணாகிய நான் மஹாராஜாவை நாதனாக அடையவேண்டுமென்று எண்ணுகிறதால், இக்கவலையை அடையவேண்டி வருகிறது. ஆனால் பராசரால் என் வரலாற்றை யான் அறிந்துகொண்டதாலும், நான் ஓர் மஹாராஜனுக்கே மனைவி ஆவேனென்று அவர் சொன்னதினாலும், மஹான்களின் ஆசீர்வாதம் அஸத்யமாகாதென்ற நம்பிக்கையாலும், என் மனமானது வேறோரிடமும் நாடவில்லை. "பிலி பசித்தால் பில்லைத்தின்னுமா" என்பதுபோல், மணந்தால் மஹாராஜனை மணக்கிறது, இல்லாவிடில் இம் மனம் வேறொருவனை நாடுமோ? ஒருநாளுமில்லை. ஹா! என்ன எனது இடது இமை துடிக்கிறது? ஹே! ஜகதீசா! இப் பாவைக்கும் நற்காலும் கிட்டுமோ? ஏது எனக்குத் தோன்றவில்லை ஐயோ! தோணித்துறையில் ஜனங்கள் சேர்ந்து விட்டார்களோ என்னவோ. நானிங்கு நிற்கிறேனே!

[போகிறாள்.]

[சந்தனுவும் விதூஷகனும் வருகிறார்கள்.]

சந்தனு.— (வாஸனை வீசுவதை முகர்ந்துகொண்டு) ஆஹா! நண்பா! என்ன வாஸனை! ஹா நண்பா! உனக்குத் தெரியவில்லையா?

விதூஷகன்:— எனக்குந் தெரியாது; ஆனால் இன்ன வாஸனையின்னுமாத்திரம் தெரியவில்லை.

சந்தனு:— ஆஹா! இம்மாதிரியான பரிமளம் நான் இதுவரையில் அனுபவித்தவனல்ல (ஸத்யவதி போன திக்கைச் சுட்டிக்காட்டி) அதோ அத்திக்கிலிருந்து வருகிறது. வா அத்திசையை நோக்கிச் சென்று பார்ப்போம்.

விதூஷகன்:— மஹாராஜா! வர வர வாஸனை குறைஞ்சு கொண்டுவருகிறது. அதனாலே,—

சந்தனு:— ஆம். அதனாலென்ன?

விதூஷகன்:— இது புஷ்பத்தின் வாஸனையாயிராது.

சந்தனு:— எதனால் ஊஹிக்கிறாய்?

விதூஷகன்:— வாஸனை போய்க்கொண்டே இருக்கவேண்டும்.

சந்தனு:— ஆம்.

விதூஷகன்:— அதனாலே, அது எதாவது ஜந்துவாயிருக்க வேண்டும்.

சந்தனு:— ஜந்துவா! ஜந்துவுக்கு வாஸனையாவது?

விதூஷகன்:— ஏன்? நல்ல பாம்புக்கு வாஸனை யில்லையா?

சந்தனு:— அதற்கு தாழம்பூ மணமல்லவா இருக்கும். இதன் வாஸனை அபூர்வமாயல்லவா இருக்கிறது.

விதூஷகன்:— காடுதானே. ஏதாவது அம்மாதிரி வாஸனையுள்ள ஜந்துக்களிருக்கலாம். யார் கண்டார்?

சந்தனு:— எதுவாயிருந்தாலென்ன? அவ் விசித்திரத்தை நாம் பார்க்கவேண்டாமா? வா, போவோம்.

விதூஷகன்:— ஐயையோ! அது ஏதாவது துஷ்ட மிருகமாயிருந்தால்.

சந்தனு:— இருந்தாலென்ன? நானிருக்க உனக்கென்ன பயம். வா சீக்கிரம் (அவனை இழுத்துக்கொண்டு போகிறான்.)

[மற்றொருபுரமாய் ஸத்யவதி வருகிறாள்.]

ஸத்யவதி:— (தனக்குள்) இன்னம் ஸரியான ஜனம் சேரவில்லை. மரத்தடியில் சற்று படுத்திருப்போம். (உட்கார்ந்து) ஒருநாளுமில்லாமல் இன்று ஜனங்களே சேராததை நினைத்தால் பராசர் வந்த தினம் என் ஞாபகத்திற்கு வருகிறது. (படுக்கிறாள்.)

[சந்தனுவும் விதூஷகனும் ஸத்யவதி வந்த வழியாக வருகிறார்கள்.]

சந்தனு:— நண்பா! நீ சொல்லியபடி மிருகமாகவே தானிருக்கவேண்டும். (ஸத்யவதி படுத்திருப்பதைப்பார்த்து)



ஆஹா! நண்பா! அதோ பார்த்தனையா? அம் மரத்தடியில் படுத்திருக்கும் கன்னிகையிடமிருந்து வருகிறது. (மறுபடி அவளைப் பார்த்துக்கொண்டே) ஆஹா! இவளது ரூபம் என் மனதை இழுக்கின்றதே.

[மறுபடி அவளைப் பார்க்கிறான்.]

விதூஷகன்:— (தனக்குள்) நல்லவேளையப்பா!

சந்தனு:— நண்பா! இந்த ஸுந்தரமாது கேவலமான ஒரு துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, கட்டாந் தரையில் அனாதைபோல் படுத்திருக்கக் காரணமென்ன? இம் மனோகர மணம் இவள் சரீரத்தில் எவ்வாறு ஏற்படும்?

விதூஷகன்:—ஏது ரொம்ப விஜாரப்படுகிறீர்களே. இங்கே காட்டிலே வஸிக்கும் வேடுவப் பெண்ணாயிருக்கும்.

சந்தனு:— ஒருநாளுமிராது. மனுஷ்ய ஸ்திரீயிடம் இப் பரிமளமேற்படக் காரணமென்ன? ஆகவே, இவள் கந்தர்வ யக்ஷ கன்னிகைகளில் ஒருவளாயிருக்கவேண்டும். என் பாக்யவசத்தால் இவள் என் கண்ணில் பட்டிருக்கிறாள். அல்லது, நான் படும் அவஸ்தையால் என் பேரில் தயைகூர்ந்து, என் ப்ரிய கங்கையே இவ்வுருக்கொண்டு வந்திருக்கவேண்டும். நண்பா! இப் பெண்ணின் ஸமீபஞ் சென்று யான் விசாரித்து வருகிறேன்.

விதூஷகன்:— வேண்டாம் மஹாராஜா! எவ்வளவோ அரசகுமாரிகளிருக்க இக் காட்டு மனுஷ்யாளெதற்கு? ஒண்ணை காட்டிலேயிருந்து கொண்டுவந்ததற்குத் தான் பலன் கிடைத்ததே போதாதா?

சந்தனு:— பாதகமில்லை. நான் போய் பார்த்துவருகிறேன்.

விதூஷகன்:— மஹாராஜா! நீங்கள் போகவேண்டாம். நான் போய் விசாரித்துக்கொண்டு வரேன்.

சந்தனு:— ஏன் நான் போனாலென்ன?

விதூஷகன்:— ஊஹூம்: அப்பரம் தங்கள் தீர்மானத்திற்கு பங்கம் வந்துவிடும்.

சந்தனு:— என்ன ?

விதூஷகன்:— இனி ஒருவளையும் பாணிக்ரஹணஞ்செய்யப்போகிறதில்லையென்று.

சந்தனு:— மூடா! அவ்வாறல்ல. தேவஸ்திரீயை அனுபவித்து மனுஷ்யஸ்திரீயை அனுபவிக்க மனங்கொள்ளாதென்றேனே ஒழிய, ஸாக்ஷாத் சாம்பமூர்த்தி கண்டாலே காதல் கொள்ளும் இம் மனோஹர மாதையா விரும்பாமலிருக்க முடியும் ?

விதூஷகன்:— ஓ அப்படியா வைராக்யம்? நமக்கென்ன தெரியாது வைராக்யத்தின் தத்வம் ?

சந்தனு:— ஸரி ஸரி உன்னுடன் பேசிக்கொண்டிருந்தால் கார்யம் கெட்டுவிடும். நண்பா! அதோ அம்மரத்தடியில் சற்று இளைப்பாறுவாய். நான் சீக்கிரம் வந்துவிடுகிறேன்.

விதூஷகன்:— என்ன சிரத்தையடா அப்பா நம்பமேலே ஸரி போய் வாருங்கள். [போகிறான்]

[சந்தனு ஸத்யவதி ஸமீபம் போக, அவள் எழுந்து தன் மார்பை இரு கைகளாலும் மூடிக்கொண்டு நிற்கிறாள்.]

சந்தனு:— மாதே! நீ யார்? இங்கு தனித்துவர காரணமென்ன ?

ஸத்யவதி:— ஆர்யரே! நான் தாஸ ராஜன் புத்ரி அவரது ஆக்ஞையால், யமுனா நதியில் ஓடம் விடுபவள் நான் வேண்டிய ஜனங்கள் இன்னம் சேராததால் இம்மரத்தடியில் படுத்திருக்கிறேன். நீங்கள் யார்? உங்களுக்கு இவ்வாற்றைக் கடக்கவேண்டுமா ?

சந்தனு:— பெண்ணே! நான் ஹஸ்தினாபுர மன்னனாகிய சந்தனு மஹாராஜன். ஸுந்தரி! உன் ரூபத்தையும் நீ பேசும் திறமையையும் பார்த்தால், நீ செம்படவ ஜாதியில் பிறந்தவளாகத் தோன்றவில்லையே ?



ஸத்யவதி:— மஹாராஜா! தாங்கள் ஸந்தேகிக்கிறபடி நான் அந்த ஜாதியில் பிறந்தவளல்ல. ஆனால் நான் பிறந்தது முதல் அவர்களால் வளர்க்கப்பட்டுவருவதால் அந்த ஜாதி என்றேன்

சந்தனு:— பின் நீ யாருக்குப் பிறந்தவள் என்று உனக்குத் தெரியாதோ ?

ஸத்யவதி:— எனக்கு வெகுகாலம் தெரியாமலிருந்தது. ஒரு நாள் ஒரு மஹானால் என் வரலாற்றை தெரிந்துகொண்டேன்.

சந்தனு:— ஸுந்தராங்கி! அதனைக்கேட்க விரும்புகிறேன்.

ஸத்யவதி:— வஸு என்னும் மஹாராஜாவின் வீர்யமானது இந் நதியில் விழுந்ததாகவும், அதை ஒரு மத்ஸ்யம் விழுங்கினதாகவும், அம் மத்ஸ்யம் ஒரு நாள் வலையில் அகப்பட்டதாயும், அதை அறுக்க அதில் நானிருந்ததாயும் அம் மஹான் சொன்னார்.

சந்தனு:— ஓஹோ! பெண்ணே! உன்னிடமிருந்து வெகு தூரம் ஓர்வித பரிமளம் வீசக் காரணமென்ன ?

ஸத்யவதி:— மஹாராஜா! நான் அம் மஹானைக் காணும் வரையில், என்னிடம் வலைநாற்றம் வீசிக்கொண்டிருந்தது. பிறகு அவரது அனுக்ரஹத்தால் இந் நறுமணமேற்பட்டது.

சந்தனு:— அப்படியா? பரிமளகந்தி! உனக்கு இன்னம் விவாஹமாகவில்லையே ?

ஸத்யவதி:— (ஸங்கோசத்தால்) இல்லை.

சந்தனு:— உம். என்ன ஆச்சர்யம்? உன் யௌவனமெல்லாம் இவ் வெய்யிலிலும் கானலிலுமிருந்து நாள் முழுவதும் ஓடந்தள்ளிக்கொண்டு வீணாவதா? ஸுந்தரி! குருடன் கையில் அகப்பட்ட ஜீவரத்தினம்போல் செம்படவனிடம் நீ இருப்பதாலல்லவோ, இந்த ஸ்திதியிலிருக்கிறாய். மேலும், தன் வயற்றில் பிறந்திருந்தால்அல்லவோ அவனுக்கு கவலை இருக்கும். பாவாய்! என் கண்ணில்பட்டபிறகுகூட, நீ இந்த ஸ்திதியில் இருப்பது தகாது. ஆகவே, என்னுடன் வருவாய்.

**ஸத்யவதி:**— மஹாராஜா! எல்லாமறிந்த தாம் இம்மாதிரி சொல்வது தகாது. என் ஜனகபிதாவை நான் நேரிட பார்த்தறியேன். என்னை சிசு முதல் தன் வயற்றில் பிறந்ததைவிட பதின்மடங்கதிகமான பக்ஷத்துடன் பாதுகாத்துவருபவரே என் பிதா. மேலும் அவருக்கோ என்னைத்தவிர வேறு குழந்தைகள் கிடையாது.

**சந்தனு.**— அப்படியென்றால் உனக்குத் தகுந்த வரனைத் தேடி உன்னை இதுகாறும் விவாஹம் செய்து கொடுக்காமல் இருக்கலாமா?

**ஸத்யவதி:**— எதற்கும் காலம் வரவேண்டாமா?

**சந்தனு:**— வாஸ்தவமே. ஆயினும் அதற்கு வேண்டிய ப்ரயத்தனங்கள் செய்யாமலிருக்கலாமா?

**ஸத்யவதி:**— அக்குற்றம் அவர் பேரில் இல்லை. என்னால் தான்.

**சந்தனு:**— அப்படியென்றால், உனக்கு விவாஹம் செய்து கொள்ளுவதில் இஷ்டமில்லையா? அல்லது உனக்குகந்த நாயகன் கிடைக்காததால் தாமதமா? (ஸத்யவதி வெட்கத்தால் மௌனமாயிருக்க) பெண்ணே! ஏன் வெட்கப்படுகிறாய். என்னிடம் சொல்லலாகாதா?

**ஸத்யவதி:**— பின் சொன்னது தான்.

**சந்தனு:**— ஓஹோ! அப்படியாயின் என்னுடன் வர உனக்கென்ன ஆக்ஷேபணை?

**ஸத்யவதி:**— அது என்னிஷ்டமா?

**சந்தனு:**— பின்?

**ஸத்யவதி:**— என் பிதாவின் இஷ்டம்.

**சந்தனு:**— பெண்ணே! உன்னிஷ்டம் தெரிந்தால் பிறகு உன் பிதாவின் ஸம்மதத்தை தெரிந்துகொள்ளலாம்.

**ஸத்யவதி:**— என் ஸம்மதமென்ன. என் பிதா ஸம்மதப் பட்டால் ஸரிதான்.

**சந்தனு:**— அப்படியானால் உன் பிதாவின் மனை எங்கிருக்கிறது?



**ஸத்யவதி:**— அதோ தெரிகிறதே அக் கட்டிடம் தான்.

**சந்தனு:**— நீயும் என்னுடன் வரலாமோ?

**ஸத்யவதி:**— ஊஹூம்! நானிப்பொழுது என் வேலையை விட்டு வரமுடியாது. மஹாராஜா! தோணித்துறையில் ஜனங்கள் சேர்ந்துவிட்டது. எனக்கு உத்தரவளிக்கவேண்டும்.

**சந்தனு.**— ஸரி. (ஸத்யவதி போகிறாள்.) நண்பா!

**விதூஷகன்:**— ஏன்! (வருகிறான்) மஹாராஜா! என்ன? மணம் வேட்டை எப்படி?

**சந்தனு:**— நண்பா! அவளுக்கு ஸம்மதந்தான். ஆனால் அவள் பிதாவின் அனுமதி பெறவேண்டுமாம். அதோ தெரிகிறது பார்; அதுதான் அவள் வீடாம். வா போவோம்.

**விதூஷகன்:**— யாரவர்?

**சந்தனு:**— தாஸராஜன்.

**விதூஷகன்:**— தாஸனா! ஐஐயோ! செம்படவனா! என்ன மஹாராஜா? வலைச்சி!

**சந்தனு:**— சேய்! இவள் க்ஷத்திரிய ஸ்திரீயே. ஆனால் அவனால் வளர்க்கப்பட்டுவருபவள். அதைப்பற்றி விபரமாய் சொல்லுகிறேன்; வா போவோம். (இழுத்துக் கொண்டு போகிறான்.)

---

## ஸீன் 5.

### இடம்:— தாஸராஜன் வீடு.

[சந்தனுவும் விதூஷகனும் வருகிறார்கள்.]

**சந்தனு:**— நண்பா! இம் மனைதான்போலிருக்கிறது. வாசற்படியில் சென்று விசாரிப்பாய்.

**விதூஷகன்:**— (வாசற்படியின் ஸமீபம் சென்று) யாரது வீட்டிலே?

தமிழ்நாடு ஆய்வு ... 188776

[செம்படவன் வெளியே வருகிறான்]

செம்படவன்:— சாமி! கும்பிட்றேன். நீங்கள் யாருங்க? எங்கே வந்தீங்க?

விதூஷகன்:— ஹஸ்தினபுர மன்னன் சந்தனு மஹாராஜன் உன்னைக் காணவேண்டி காத்துக்கொண்டிருக்கிறார்.

செம்படவன்:— எங்கே, எங்கே?

விதூஷகன்:— அதோ நிற்கின்றார்.

செம்படவன்:— (முன்வந்து) மவராசா! மன்னிக்கணும். ஒரு வார்த்தை சொல்லி அனுப்பிச்சா நான் அங்கே வந்திருக்கமாட்டேனா? மவராசா! இதோ இந்த மேடையில் உட்காரவேண்டும்.

சந்தனு:— (உட்கார்ந்து) தாஸராஜனே! தாமும் வீற்றிருப்பீர். (அவனுட்கார) வேட்டையின் களைப்பால் தாகமதிகமாக யமுனா நதியை நாடி வந்தோம். அங்கு உமது புதல்வி ஸத்யவதியைக் கண்டேன். விசாரித்ததில் அவள் விவாஹமாகாதவளென தெரிந்துகொண்டேன். என் மூத்த மனைவி போய் 15-வருஷங்களாயும் வெறுப்படைந்து மறு விவாஹம் செய்துகொள்ளாமலே இருந்தேன். உமது புதல்வி ரூபாலாவண்யத்தாலும் குணாதிசயத்தாலும், அவளை மனைவியாகக் கொள்ளலாமென மதித்து அவளபிப்பிராயத்தை கேட்டேன். அதற்கவள், தன் பிதாவுக்கு ஸம்மதமாயின் தனக்கு ஸம்மதமென்று சொல்லி, உமது இருப்பிடத்தையும் காட்ட, இங்கு வந்தேன் உமது அபிப்ராயத்தை அறிய.

செம்படவன்:— நன்னாயிருக்கு. "வாழைப்பழம் வேண்டாமென்கிற குரங்குண்டா"? அதுபோல், அவளும் க்ஷத்திரிய குமாரியாதலால், ஓர் அரசனை மணக்கத் தகுந்தவளென்றாலும், இவ்விடத்தை வேண்டாமென்பார்களா? [illegible]இல்லை. ஆனால்,—

சந்தனு:—



செம்படவன்:— தங்கள் மூத்த தாரத்திற்கு பிள்ளை இருக்கிறதா?

சந்தனு:— இருக்கின்றான் ஒருவன்.

செம்படவன்:— அப்படியானால், எனக்கொரு வரன் வேண்டும்

சந்தனு:— என்ன?

செம்படவன்:— என்னவென்றால், என் குழந்தை ஸத்யவதியின் வயற்றில் பிறக்கும் பிள்ளைக்குத்தான் யுவராஜ பட்டாபிஷேகஞ் செய்யவேண்டும்.

சந்தனு:— (முகம் மாறி) தாஸராஜனே! அவ்வரனை அளிக்க அசக்தன் யான். ஏனென்றால், மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டமளிப்பது ராஜ நீதியுமல்ல; ஹஸ்தினபுர மன்னர்களுக்கும் அழகல்ல. ஆதலால், அவ்வுடம்படிக்கை அல்லாது மற்றெந்த ராஜபோகங்களும் அளிக்கின்றேன்.

செம்படவன்:— (கைகளை பிசைந்துகொண்டு) மவராசா! என்னை மன்னிக்கணும். எங்க சாதிமுறை தப்பி நடந்தும், இப் பெருமையில்லாவிட்டால், பிறகு—

சந்தனு:— ஸரி; நான் வருகிறேன். [போகிறார்கள்.]

---

## ஸீன் 6.

இடம்:— ஹஸ்தினபுரம் அரண்மனை.

[பீஷ்மன் வீற்றிருக்கிறான்.]

பீஷ்மன்:— என்ன விந்தை? என் பிதா வேட்டையிலிருந்து திரும்பி வந்ததுமுதல் ஏதோ மனக்கவலையில் ஆழ்ந்து இருக்கிறார். ஆனால் என் தாயாரைப்பற்றியோவென்றால், என்னுடன் ஸரிவர பேசாததிலிருந்தும் இன்னம் மற்ற விஷயங்களிலிருந்தும் அதில்லையென்று விளங்குகிறது. நான் பலமுறை அவரைக் கேட்டும் "ஒன்றுமில்லை" என்கிறார். அவருக்கு அந்தரங்க

நண்பனும், அவருடன் வேட்டைக்குக்கூடப்போனவனுமான விதூஷகனைக் கேட்டறியலாமென்று அவனை இவ்விடம் வரும்படி சொல்லியும் இன்னும் வரவில்லை. உம். பிதாவின் கவலையைத் தீர்க்காத புத்திரனிருந்தென்ன இறந்தென்ன ?

[விதூஷகன் வருகிறான்.]

பீஷ்மன்:— விதூஷகரே! வாரும்.

விதூஷகன்:— இளவரசே ! என்ன விசேஷம் ?

பீஷ்மன்: — உம்மிடம் ஓர் ஸமாசாரம் கேட்கவேண்டி உம்மை அழைப்பித்தேன். நீர் தயவுசெய்து சொல்வீரா ?

விதூஷகன்:— நன்றாயிருக்கு. அதென்ன அப்படி கேட்கரைகளே. நான் அவ்வடத்து மனுஷனல்லவா எப்போதும்.

பீஷ்மன்:—என் பிதாவுக்கு நேத்ரஸ்தானமாயிருக்கிறீரே-

விதூஷகன்:— நேத்ரஸ்தானந்தான். இருந்து என்ன ப்ரயோசனம்? மனுஷ்யனுக்கு பெண்டாட்டி இருந்தால்தான் மற்றவர்கள் நேத்ரஸ்தானம், கர்ணஸ்தானம், ஹஸ்தஸ்தானமாயிருக்கலாம். அந்தஸ்தானம் போய்விட்டதோ எல்லாஸ்தானமும் ஸ்ஞனம் பண்ணிஆய்விடுகிறது. அப்புறம் யாரைக்கண்டாலும் வெறுப்புதான். கவலைதான்.

பீஷ்மன்:— விதூஷகரே ! அக் கவலை என்னவென்று உமக்கு நன்றாய் தெரிந்திருக்குமே.

விதூஷகன்:— அதுதான் சொன்னேனே.

பீஷ்மன்: — ஏன் என் பிதா விவாஹம் செய்துகொள்ளக் கூடாது ?

விதூஷகன்:— கொள்ளலாம். காலம் ஒத்துக்கொள்ளவில்லையே. முன்னே போனால் கடிக்கிறது. பின்னே வந்தால் உதைக்கிறது. என்ன பண்றது போங்கோ.



பீஷ்மன்:— விதூஷகரே ! நீர் சொல்வது எனக்கு விளங்கவில்லை. மஹாராஜாவால் நேசிக்கப்பட்டவள் இவரை மணக்க இஷ்டப்படவில்லையா ?

விதூஷகன்:— அப்படியிருந்தால்தான் தேவலையே.

பீஷ்மன்: — பின் ?

விதூஷகன்:— சாமி வரங்கொடுத்தும் பூசாரி வரங்கொடாததுபோலிருக்கு.

பீஷ்மன்:— அதாவது அவளுக் கிஷ்டமிருந்தும், அவள் பெற்றோர்கள் ஸம்மதிக்கவில்லையா ?

விதூஷகன்:— ஆம்.

பீஷ்மன்: — என்ன காரணம் ?

விதூஷகன்:— ப்சு. அதையேன் கேட்கரைகள்? நடக்காத காரியம் தள்ளுங்கோ.

பீஷ்மன்: — விதூஷகரே ! அதென்ன அவ்வாறு சொல்லிவிட்டீர் ? உலகத்தில் முடியாததும் உண்டோ. எதுவாயிருந்தபோதிலும், என்னுயிரைக் கொடுத்தாவது அதை முடித்துவைப்பேன். நீர் மாத்திரம் தயைகூர்ந்து சொல்லும்.

விதூஷகன்:— வேண்டாம் இளவரசே! அது தீராக்கவலை. மேலும் அதை உம்மிடம் சொல்லலாகாது.

பீஷ்மன்:— ஓய்! நீர் என்னை நன்றாயறியாததால் என்னிடம் சொல்ல அஞ்சுகிறீர் போலும். எனக்கு என் பிதாவைப் பார்க்க மனம் தாளவில்லை. அவரை நான் பன்முறை கேட்டும் அவர் சொல்லாது மறைக்கின்றார். உம்மையாவது கடைசியாக கேட்டுப்பார்க்கிறது. அப்படி நீரும் சொல்லாவிட்டால், பிதாவுக்குபயோகப்படாத இச்சரீரத்தை வைத்துக்கொள்வதில்லையென தீர்மானித்தே உம்மை வரவழைத்தேன். நீரும் சொல்ல மறைத்தால், இக்ஷணமே அக்னிப்ரவேசம் செய்யப்போகிறேன். இது ஸத்யம். என்ன சொல்லுகிறீர் ?

விதூஷகன்:— ஐஐயோ! வேண்டாம் வேண்டாம்; நான் சொல்லிவிடுகிறேன். ஆனால், இளவரசே! சொன்னால் அது உமக்கே பெருந் துக்கத்தைத் தருமே யென்று தான் யோசிக்கிறேன்.

பீஷ்மன்:— உம். நீர் நினைப்பது தவறு. என் பிதாவின் கவலையை இன்னதென்று அறியாதிருப்பதுதான் துக்கமே ஒழிய மற்றெதையும் நான் துக்கமென மதியேன். உமக்கு நம்பிக்கைவர எவ்வித ப்ரமாணங்கள் வேண்டுமென்றாலும் செய்துதர தயாராயிருக்கிறேன். நீர் ஒன்றுக்கும் அஞ்சாது சொல்லும். அவர் கவலையைத் தீர்த்தபிறகே யான் போஜனம் செய்வேன். இது ஸத்யம். என்னை ஈன்றெடுத்த கங்காதேவியின்மேலும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். போதுமா? இனியாவது சொல்லுமே.

விதூஷகன்:— மஹாராஜா வேட்டைக்குச் சென்ற காட்டில் ஓர் மாதைக் கண்டு ஆசைப்பட்டார். அவள் ஸம்மதத்தைக் கேட்க, அவள் தன் பிதாவுக்கு ஸம்மதமானால் தனக்கும் ஸம்மதமென்று சொல்ல, அவள் பிதாவிடம் சென்று கேட்க, அவனும் சொடுக்க ஸம்மதித்தான். ஆனால்—

பீஷ்மன்:— ஆனால், என்ன? இன்னமுமா என்பேரில் ஸந்தேஹம்?

விதூஷகன்:— ஸந்தேஹமில்லை இளவரசே! ஆனால், அது என்னறியாமலேயே நின்றுவிட்டது.

பீஷ்மன்:— பாதகமில்லை. சொல்லுமிப்பொழுது.

விதூஷகன்:— அவன், தன் பெண்வயற்றில் பிறக்கும் பிள்ளைக்குத்தான்—

பீஷ்மன்:— ப்பூ! இவ்வளவுதானா? நீங்கள் மறைத்ததைப் பார்த்தால் ஏதோ மிகவும் அஸாத்யமான கார்யமோவென்றல்லவோ ஸந்தேஹித்தேன். கையில் வெண்ணையிருக்க நெய்க்கழுபவர்போலல்லவா இருக்கிறது. ஸரி; நாளையதினமே இத் திருமணத்தை முடித்து வைக்கிறேன். விதூஷகரே! என் ஸாரதியிடம் போய்



என் ரதத்தைப் பூட்டச் சொல்லிவிட்டு நீரும் வர வேண்டும் அவ்விடம் போக. [போகிறான்.]

விதூஷகன்:— அப்படியே.

---

## ஸீன் 7.

### இடம்:— தாஸ ராஜன் வீடு.

[ஸாரதி, விதூஷகன், பின்தொடர பீஷ்மன் வருகிறான்.]

விதூஷகன்:— (வாசலண்டைபோய்) யார் வீட்டில்? தாஸ ராஜனிருக்கிறாரா?

செம்படவன்:— (வெளியே வந்து) யார்? ஓ! வாங்கோ; வாங்கோ.

விதூஷகன்:— சந்தனு மஹாராஜாவின் குமாரர் வந்திருக்கிறார் உம்மைக் காண.

செம்படவன்:— ஆ! அப்படியா? (அவர் சமீபம் வந்து) வாங்கோ; வந்தனஞ்செய்கிறேன். இந்த ஆஸனத்தில் அமருவீர்.

பீஷ்மன்:— (உட்காராமலே) தாஸராஜனே! தமது குமாரத்தியை வரித்த மன்னன் சந்தனுவின் குமாரன் யான். யானிருப்பதால் தமது புத்திரியின் வயிற்றில் பிறக்கும் புத்திரனுக்கு என் பிதாவின் ராஜ்யம் கிடைக்காதென்ற காரணத்தை முன்னிட்டுமாத்திரம் உமது புத்திரியை கன்னிகாதானஞ்செய்ய இஷ்டப்படவில்லை போலும்.

செம்படவன்:— ஆம்.

பீஷ்மன்:— அப்படி அப் புத்திரனுக்கு ராஜ்யம் கிடைக்கும்பக்ஷத்தில் உமக்கு ஆக்ஷேபம் இல்லையே

செம்படவன்:— இல்லை.

பீஷ்மன்:— தாஸராஜனே! இதோ பிரதிக்ஞை செய்கிறேன். உமது புத்திரியாகிய ஸத்யவதிக்கும் என் பிதாவிற்கும் பிறக்கும் புத்திரனுக்கே என் பிதாவின் ராஜ்யத்தை அபிஷேகஞ் செய்துவைக்கிறேன். நான் அதற்கொருநாளும் ஆசைப்படேன். இது ஸத்யம். ஆதலால், தாஸராஜனே! உமது புத்திரியும் எனது சிற்றன்னையுமாகிய ஸத்யவதியை என்னுடன் அனுப்புவீர்.

செம்படவன்:— பரத சிரேஷ்டரே! எவராலும் செய்வதற்கரிய பிரதிக்ஞையை நீர் செய்தீர். உம்மைப்போல் ஸத்புத்திரனை அடைய உமது பிதா என்ன பாக்யஞ் செய்தாரோ? செய்து கொடுத்த பிரதிக்ஞையினின்று நீர் ஒருநாளும் மாறமாட்டீரென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். ஆனால்,—

பீஷ்மன்:— பின், வேறென்ன ஸந்தேகம்? எதுவாயிருந்தபோதிலும் தாராளமாய் கேட்கலாம். என் பிதாவின் மனஸை ஸந்தோஷப்படுத்தாது இவ் வுயிரை வைத்துக்கொள்வதில்லை என்று கங்கணதாரணஞ் செய்து இருக்கிறபடியால், அது நிறைவேற, எப் பிரதிக்ஞையும் செய்துதர ஸித்தமாயிருக்கிறேன். ஆகவே, அஞ்சாது வெளியிடுவீர் உம் மனதிலிருப்பதை.

செம்படவன்:— பரதகுல திலகா! உமதாயுள் உள்ளவரையில் கவலையில்லை. ஆனால், உமது ஸந்ததி விஷயத்தில் மாத்திரம்தான் -

பீஷ்மன்:— ஓஹோ! அப்படியா? தாஸராஜனே! நீர் எண்ணுவதும் வாஸ்தவமே. அவ்விதமாக ஏற்படாமலிருக்க இப் பிரதிக்ஞை செய்து தருகிறேன். கேளும். இங்குள்ளவர்களும், தேவர்களும், ரிஷிகளும், ஸூர்யசந்திராதி தேவதைகளும், கேட்கட்டும்:— ராஜ்யம் முழுவதையும் முன்னமே என்னால் விடப்பட்டது. நான், என்னுயிர் என் தேகத்தை ஒட்டியிருக்கும் வரையில், புத்திரோத்பத்தி செய்யேன். அதற்குக் காரணமான கிருஹஸ்தாச்ரமத்தை விரும்பாது, என் ஆயுஸ் பரியந்தம் பிரம்மசாரியாகவே இருப்பேன். இது ஸத்யம். தாஸராஜனே! மறுபடியும் சொல்லுகிறேன். ராஜ்யத்தையும் ஸ்திரீ ஸம்போகத்தையும் முற்றிலும் விட்டேன், விட்டேன், விட்டேன். இனி உம் மனக்கவலையை விட்டு என் சிற்றன்னையை அனுப்பும்.



செம்படவன்:— ஆஹா! வாருங்கள் உள்ளே. என்னாலளிக்கப்படும் அதிதி ஸம்ஸ்காரத்தை ஏற்றுக்கொண்டு பிறகு என் புத்திரியை அழைத்துச் செல்லலாம்.

---

## ஸீன் 8.

இடம்:— கல்யாணமண்டபம்.

[சந்தனு, ஸத்யவதி, பீஷ்மர், மந்திரி முதலியவர்கள் இருக்க குரு விவாஹத்தை நடத்துகிறார். மங்களவாத்யம் நடக்கிறது.]

**மங்களம்! மங்களம்!! மங்களம்!!!**

(Copyright reserved by the Author.)

இவ் வுலகத்தில் நாம் எண்ணியவாறெல்லாம் காரியங்கள் நடப்பதாயின், நமக்கு வேறென்னவேண்டும்? ஆனால் அவ்வாறு எப்பொழுதும் நடப்பதில்லை. நியாயமான விஷயங்களே மேற்கூறியவாறு மாறுபட்டு நிகழ்கின்றன. அவ்வாறாயின், கொடுஞ் சூழ்ச்சிகளும், சதியாலோசனைகளும் எள்வாறு மறுகணத்தில் நிகழுமென்று நிச்சயித்து கூறுதல் எளிதல்ல. உண்மை அவ்வாறிருக்க, ஜெயராம் சற்றுநேரத்திற்குள் யாது நிகழுமோ என்பதைச் சிறிதும் சிந்தியாது பலவாறு மனோராஜ்யம் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது பல மனிதர்கள் ஓடுவதாலுண்டான ஓசையும், பலர் கூச்சலிட்டசப்தமும் கேட்டன. ஜெயராம் மெதுவாக மர நிழல்களில் பதுங்கியவண்ணம் நகர்ந்துகொண்டேயிருந்தான். ஓர் உருவம் அப்பொழுது உள்ளிருந்து திடீரென ஓடி மறைந்தது. சில மனிதர்களும் ஓர் போலீஸ் சேவகனும் அவசரமாக உள்ளே வந்துகொண்டிருந்தார்கள். துப்பாக்கி சுடப்பட்டதால் ஏற்பட்ட வெடியோசையும், கண்ணாடி ஜன்னல் உடைக்கப்பட்டதினால் ஏற்பட்ட சப்தமும், பக்கத்தில் வசித்துவந்த பலருடைய கவனத்தைக் கவர்ந்துவிட்டது. இதற்குள் பலர் அங்கு வந்து கூடிவிட்டனர். எல்லோரும் ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடு வசித்துவந்த "கணபதி விலாஸம்" என்னும் பெரிய மாளிகையினுட் புகுந்து, சப்தமுண்டான அறையினுட்சென்றனர். அப்பொழுது மின்சார விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. அங்கு அவர்கள் கண்ட காட்சியானது அவர்களை திடுக்கிடச் செய்துவிட்டது.

வெகு சமீபத்தில் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு இருவர் தரையின்மீது இறந்து வீழ்ந்துகிடந்தார்கள். ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடுவின் பின்புறமாக முதுகின் வழியே துப்பாக்கிக்குண்டு பாய்ந்திருந்தது. அது சரியாக மார்பின் வழியே ஊடுருவிச் சென்றிருந்தது. அவருடைய ஆப்த நண்பனும்—அருமை நேசனும்—அவரிடம் காரியதரிசியாக வேலைபார்த்தவனுமான வெங்கடரங்கம் ஜமீன்தாரால் கழுத்து நெருக்கப்பட்டு அதனால் இறந்து கீழே

விழுந்துகிடந்தான். கிருஷ்ணசாமி நாயுடுவின் கைகள் இன்னும் வெங்கடாரங்கத்தின் கழுத்தைப் பிடித்தபடியே இருந்தன.

அச் சமயம் திடீரென்று பலமான உரத்த கூச்சல் வெளியிலிருந்து செவிடுபடும்படியாக கிளம்பிற்று. இருவர் மிகுந்த பயமடைந்து கலவரமடைந்திருந்த ஜெயராம் நாயுடுவைப் பலமாகப் பிடித்திழுத்துக்கொண்டு அறையினுள் நுழைந்தனர். ஜெயராமின் உடைகள் கந்தல் கந்தலாக கிழிந்து தொங்கிக்கொண்டிருந்தன. அவனுடைய கைகளிலிருந்தும் முகத்திலிருந்தும் ரத்தம் வந்துகொண்டிருந்தது. தன்னை விடுவித்துக்கொள்ள அவன் மிகவும் பலத்துடன் போராடினான்.

* * * * *

மறுநாட்காலை சுமார் மணிஏழிருக்கலாம். பெயர்பெற்ற துப்பறியும் *ஜயஸிங், தன்னுடைய அறையிலுட்கார்ந்த வண்ணம் அன்றைய "இந்து நேசன்" பத்திரிகையில் "கணபதி விலாஸ்" இரட்டைக்கொலையைப் பற்றி வெகு கவனமாகப் படித்துக்கொண்டிருந்தான். எதிரே இருந்த மேஜையின் மீது பல பத்திரிகைகள் கிடந்தன. அவற்றுள் மிக முக்கியமானது ஸ்ரீரங்கம் 'பிரஜானுகூலனும்' 'நமது 'பாலவித்யா'வும், சென்னை 'அமிர்தகுணபோதினி' யுமே யாகும். மற்றும் அந்த அறையிலிருந்த பல கண்ணாடி அலமாரிகளில் பற்பல உயர்தர தமிழ்நூல்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. பக்கத்திலிருந்த மற்றொரு நாற்காலியில், ஜயஸிங்கின் அரிய நண்பனும், உதவித் துப்பறிவோனும், சிறந்த தமிழ்ப்பத்திரிகைஆசிரியனுமான ஸ்ரீநிவாஸன் உட்கார்ந்துகொண்டு, பிரஸித்த அநுபவஞான கதாசிரியரும், பிரபல கிரந்த கர்த்தாவும், சிறந்த பத்திரி

* இவருடைய துப்பறியும் திறமையை 'மோகனமணி' என்னும் சிறந்த நாவலில் காணலாம்.



காசிரியரும், அனுபவ திலகமுமான ஸ்ரீரங்கம் S. G. இராமாநுஜலு நாயுடுகாரு எழுதிய விலைமதிக்கவொண்ணாத அரும பெரும் அநுபவ மாணிக்கமாகிய 'விசித்தரத் துப்பரியும் கண்' என்னும் சிறந்த குடும்ப பொக்கிஷத்தைப் படித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது யாரோ பலமாக கதவைத் தட்டினர். கதவு திறக்கப்பட்டதும், போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பீப்பாய்துரை (Mr. Cask) உள்ளே, சிறிது புன்முறுவலுடன், நுழைந்தார். பக்கத்திலிருந்த நாற்காலி யொன்றில் உட்காருமாறு ஜயஸிங் கூறினான்.

'இதுவரையில் எனக்குத் தெரிந்தவரையில், இந்த 'இரட்டைக்கொலை' மிகு சாமார்த்தியமாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. தாங்களும் அதனுடைய விவரங்களையே 'நேசனில்' படித்துக்கொண்டிருக்கிறீர் போலும்' என்றார் போலீஸ் புலி.

'ஆம். இது ஒரு ஆச்சர்யமான இரட்டைக்கொலையே. இந்த வெங்கடாரங்கம் மிகவும் நம்பிக்கையாகவே ஜமீன்தாரிடம் வேலைபார்த்துவந்தான் என்று தெரிகிறது. ஆனால் அவன் அவரிடம் வேலைக்கு வந்து இன்னும் ஒரு வருடம் பூர்த்தியாகவில்லை. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு அவன் இவ் வேலையில் அமர்ந்திருப்பான் என்பதில் சந்தேகமில்லை. இவன் இதற்கு முன்னரே பல ஆச்சர்யமான கொள்ளைகளில் சம்மந்தப்பட்டிருந்தான். மிகுதந்திரமாக சேலைசெய்துவந்ததால் இதுவரையில் அகப்படாதிருந்த இவன் இந்த பெரும் களவில் சம்பந்தப்பட்டு இறந்துவிட்டான். இனி இதில் இன்னும் சம்மந்தப்பட்டிருக்கும்' மற்றவரைக் கண்டுபிடிக்கவேண்டும்' என்றனன் ஜயஸிங்.

'அவனுடன் சேர்ந்து வேலைசெய்வதற்குப் பலர் இருக்கிறார்கள். அவனுடைய வீட்டில் இதுவரையில் அகப்படாதிருந்த பல கொள்ளைப் பொருள்கள் அகப்பட்டிருக்கின்றன. அவன் மனைவியை இப்போது காவலில் வைத்திருக்கிறேன்' என்றனர் பீப்பாய் துரை.

ஜயஸிங்:— ஆனால் அந்த உயர்ந்த வைரம் எங்கிருக்கிறது? அது அவன் வீட்டில் அகப்படவில்லையா?

போலீஸ் புலி:— ஜெயராம் நாயுடுவும் வெங்கடரங்கமுமே இவ் வைரக் களவிற்குக் காரணம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் இப்பொழுதோ வெங்கடரங்கம் கொலை செய்யப்பட்டான். ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடுவும் சுட்டுக் கொல்லப்பட்டார். பாக்கி இருப்பது ஜெயராம் ஒருவனே. ஆனால் அவன் தனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாதென்று சாதிக்கிறான். அடடா! நான் வந்த கார்யத்தை மறந்தே விட்டேன். தாங்கள் இப்பொழுது வெளியிற் புறப்படவேண்டும். நான் எதற்காக இங்கே வந்தேனென்பதை நீர் எவ்வளவுகாலம் யோசித்தாலும் கூற முடியாது. ஜெயராம் என்னை உம்மிடம் இக்கொலையின் விஷயத்தைக் கூறி தன்னை இதினின்றும் விடுவிக்கும்படி கேட்டுக்கொண்டதாகத் தெரிவிக்கும்படி சொன்னான். நான் அவனுக்கு ஒன்றும் வாக்களிக்கவில்லை. எப்படிச்செய்யவேண்டுமோ அவ்விதமேசெய்யும். இந்த ஜெயராம் தன்னுடைய வாழ்நாட்களில் பாதியை துன்மார்க்கத்தில் செலவழித்துவிட்டான். இவன் இதுவரையில் செய்துவந்த தீமைக்கு அளவில்லை. துஷ்டர்களையும், கொலைபாதகரையும், கொள்ளைக்காரரையும் பிடித்தடக்குவதே தொழிலாகக் கொண்டுள்ள உம்மை இவன் நம்புவது வெகுவிநோதமே. கையும் களவுமாக அந்த இடத்திலேயே இவனை பிடித்தாய்விட்டது. ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடு வெங்கடரங்கத்தின் கழுத்தைப் பிடித்து நெருக்கும்போது இவன் பின்புரமிருந்து அவரைச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றான். முதலில் சிறிய திருட்டுக்களில் சம்மந்தப்பட்டிருந்த இவன் இன்று ஒரு பெரும் கொள்ளைக்காரனாயும் கொலையாளியாயும் மாறியிருக்கின்றான். இதுவே இவன் கழுத்துக்குக்கயிறாய்விட்டது. இவன் துப்பாக்கியைசுடும்போது அதிலிருந்துண்டான மருந்துப்



புகைகள் அப்படியே கருப்பாக இவன் கைவிரல்களில் பதிந்திருந்தன. அது அழிந்துவிட நான் விடவில்லை. உடனே அவன் அதை அழித்துவிடுமுன் நான் அதை புகைப்படமெடுத்துவிட்டேன். (இதைக் கவனமாகக் கேட்ட ஜயஸிங் தலையை அசைத்தான்.) இதுவரையில் கொலைக்குற்றத்துக்காக தண்டனை அடைந்தவர்கள் அநேகமாய் இந்த விதமான காரியமே செய்திருக்கின்றனர். ஆனால் இதுவரையில் ஜெயராம் இத்தகைய குற்றங்களில் சம்பந்தப்பட்டதில்லை. ஆனாலும் இவன் மிகுந்த தந்திரமும் யுக்தியும் நிறைந்தவன். முடியுமானால் இப்படிப்பட்ட சந்தேகமான பேர்வழிகளை எப்படியாவது தொலைத்துவிடுவதில் போலீஸாருக்கு திருப்தியே. இன்னும் வீணே பேசி உம்முடைய காலத்தை வீணாக்க எனக்கு விருப்பமில்லை.

ஜயஸிங்:— தாங்கள் வந்ததைப்பற்றி எனக்கு அதிக ஸந்தோஷமே. ஜெயராம் எதற்காக என்னை வரும்படி கூறினானோ அதைக்கவனிப்பதில் தடையில்லை. அவன் குற்றமற்ற நிரபராதியாயின் அவன் நியாயத்தை அடைய ஸர்வசுதந்திரமுண்டு. இவ்வளவு பெரிய கொள்ளைக்காரனும் என்னை நம்புகிறானே என்று எனக்கு ஸந்தோஷந்தான். அவர்களில் அநேகர் என்னை தங்களுடைய அரிய நண்பனாகக் கருதுகிறார்கள்.

இதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் நகைத்தார். ஜயஸிங்கின் குணத்தை யறிய ஒருவராலுமாகாது. மறுகணத்தில் அவன் என்ன செய்வான் என்பது ஒருவருக்கும் தெரியாது.

இத்துடன் அவர்களது சம்பாஷணை முடிவுபெற்றது. மூவரும் போலீஸ் தலைமை ஸ்தலத்தை நோக்கிச் சென்றனர். துப்பறியும் ஜயஸிங்கும் அவன் நண்பன் ஸ்ரீநிவாஸனும் ஜெயராம் அடைக்கப்பட்டிருந்த அறையை யடைந்தனர். பாலீஸ் புலி தம்முடைய காரியாலய அறையை

யடைந்தார். ஜெயராம் ஒருமூலையில் முகத்தை மறைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

ஜயஸிங்:— என்ன விசேஷம்? நான் உனக்கு என்ன நன்மை செய்யக்கூடுமென்ன நீ நினைக்கிறாய்?

ஜேயராம்:— கடைசியாக எவ்வளவு கெடுதி செய்யக் கூடுமோ அவ்வளவும் செய்திருக்கின்றனர் என்மேல் கொலைக் குற்றமும் சுமத்தியிருக்கின்றனர். நான் சுடவே யில்லை. எனக்குத் துப்பாக்கியே கிடையாது. துப்பாக்கியை நான் தொடவுமில்லை

ஜயஸிங்:— அப்படியாயின் உன்னுடைய கை விரல்களிலிருந்த புகைப்பட்ட அடையாளம் எதனால் உண்டானது? இன்ஸ்பெக்டர் ஒருமுட்டாளல்ல. அவர் இதற்குமுன் இத்தகைய பல குற்றங்களைக்கண்டுபிடித்திருக்கிறார்.

ஜேயராம்:— எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது.

ஜயஸிங்:— சொல்லிவிடு உண்மையை. நீ எதையோ மறைக்கிறாய். நடந்த முழு உண்மையும் தெரிந்தாலன்றி நான் உனக்காக ஒன்றும் செய்யமுடியாது.

இதைக்கேட்டு சிறிது தெளிவடைந்த ஜெயராம் 'நான் தப்பிக்கொள்ள முடியாது என்றுதெரிந்தஉடனே பூமியில் கையால் ஒரு பள்ளம் தோண்டினேன். நான் ஒளிந்திருந்த அப் பாகம் தோட்டத்தின் ஒரு மூலையாகும். அங்கே காகிதக்குப்பைகள் எரிக்கப்பட்டிருந்தன. அதுவே என் கைவிரல்களில் அத்தகைய கருப்புநிறமாக அடையாளம் படிந்தது' என்றான்.

'இதன் சுற்றுப்புறங்களை சற்று விவரமாகக்கூறு, என்றான் ஜயஸிங்.

'முடியாது. அன்றிரவு அதிக இருட்டாயிருந்தது' என்றான் ஜெயராம். மறுபடியும் அவன் உண்மையைக்கூற மனமற்றவனாய் ஏதோ சிலவற்றை மறைத்துவிடஎண்ணினான்.

ஜயஸிங்:— உ[illegible]யும் நீ[illegible]யே தீரவேண்டும். இன்றேல் அவைகளை யெல்லாம் கண்டுபிடிக்க நான் வீணாக காலத்தை கழிக்கவேண்டும். வீணாக விஷயத்தை மறைக்க முயற்சிக்காதே. அது உனக்கு ஆபத்தாய் முடியும். எப்படியும் நான் முயன்றால் உண்மை வெளிவந்துவிடும். உன்னுடைய மூடத்தனத்தை யெல்லாம் விட்டு, ஏன் அங்கே ஒரு பள்ளம் தோண்டினாய்; அதில் என்ன மறைத்துவைத்திருக்கிறாய் என்பதைச் சொல்லிவிடு. ஏன் அது இப்பொழுது காணாமல் மறைந்திருக்கும் அதிர்ஷ்ட வைரம் தானே?

ஜெயராம்:— ஆம்! ஆம்!! அதனால் எனக்கு வீண் தொந்தரவைத்தவிர வேறொன்றும் கிடைக்கப்போவதில்லை போல் தோன்றுகிறது. நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கும் போலும்! எங்கள் எண்ணம் இப்படியா மண்ணாக வேண்டும்! ஈசா இதுவும் நின் திருவிளையாடலா? இதுவரையில் யாவும் எங்கள் சூழ்ச்சிப்படி நடந்துவந்து இப்பொழுது திடீரென்று எங்கள் ஒவ்வொரு செயலும் இப்படியா வீழ்ச்சியடைய வேண்டும்? " அதர்மம் முதலில் பல முறை வெற்றியடைவதுபோல் காணப்படினும், இறுதியில் தர்மமே ஜெயமளிக்கும்போலும்! " இந்த உலக மறிந்த உண்மை இப்பொழுதுதான் எனக்குப் புலப்படுகிறது. இனிமேல் எவ்வளவு ஞானம்பெற்றுமென்ன? இருந்த நாளெல்லாம் கடவுளைச் சிறிதும் நினையாமல் மனம் போனபடி திரிந்து சாகுந்தருணத்தில் சங்கரா! சங்கரா!! என்றால் என்ன பயன்? ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும் போலும்! நாம் எதிர்பாராத ஒன்றும் முன்வந்து தோன்றுதலும் இயற்கை. இதுவே ஈசுவர நியதி என்றும் தெரிகிறது. இனி உண்மையைக் கூறுவதல்லாது வேறென் செய்வது? வைரம் விற்கப்படும் வரை என்னிடம் இருக்கவேண்டுமென்பது ஒப்பந்தம். எங்கள் சூழ்ச்சிப்படியே வெங்கடாங்கம் ஜமீன்

188776



சென்னை 600 008

தார் கிருஷ்ணசா[illegible]யத்தில் மயக்க மருந்தைக் கலந்தான். ஆனால் திடீரென்று நாங்கள் எதிர்பார்த்ததற்குமுன், கிருஷ்ணசாமி நாயுடு மயக்கந்தெளிந்தெழுந்து, மிகுந்த கோபத்துடன், வெங்கடரங்கத்தின் தொண்டையை நெருக்கிப்பிடித்துக் கொண்டார். இது சிறிதும் நாங்கள் எதிர்பாரா சம்பவமன்றோ? இதனால் நாங்கள்செய்த ஏற்பாடுகள் எதிர்பாராவகையில் பாழடைந்தன. கீழே விழுந்து கிடந்த துப்பாக்கியைக் கொண்டே ஜமீன்தார் வெங்கடரங்கத்தை சுட்டுக் கொன்றுவிட்டார் என்று துப்பாக்கி வெடிச்சத்தத்தைக்கேட்டவுடன் நான் தீர்மானித்துக்கொண்டு, இனி அங்கிருந்தால் நம்முடைய நிலைமை மிக்க ஆபத்துக்கிடமாகுமென்றெண்ணி அங்கிருந்த கண்ணாடிஜன்னலை உடைத்துக்கொண்டு வெளியேறிவிட்டேன். இதுவே நான் அறிந்த உண்மை.

ஜயஸிங் அப்பொழுது ஜெயராமை உற்றுப்பார்த்த பார்வையானது அவனது சிரத்தையே ஊடுருவிச் செல்வது போலிருந்தது. பிறகு அவன், "ஜெயராம்! நான் உன்னை முழுவதும் நம்புகிறேன். இன்னும் ஒன்றிரண்டு கேள்விகள். அவ்வளவே. நீயும், வெங்கடரங்கமும் எவ்வளவு காலம் இந்த சூழ்ச்சியைப்பற்றி பேசியவாறிருந்தீர்கள்?" என்றான். ஜெயராம்,

"சென்ற ஆறுமாதகாலமாய் இதை எவ்விதம் நிறைவேற்றுவது என்றே யோசனை செய்துவந்தோம். ஆயினும், ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடு அந்த வைரத்தை எங்கு மறைத்துவைத்திருந்தாரென்று கண்டுபிடிக்கக்கூடவில்லை. அது வருடத்திற்கு ஒரு முறை அவரது ஆண்டு நிறைவு விழாவன்றே வெளியே எடுக்கப்படும் என்று தெரியவந்தது. ஆகையால் அன்றே அதைக் கவர்ந்துவிட நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம்" என்றான். ஜயஸிங்,

"சாதாரணமாய் நீங்கள் எங்கே சந்தித்துப் பேசுவது வழக்கம்?" என்றான். ஜெயராம்,